# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

## ஆகஸ்ட் 2009 ஜீவியம் 15 மலர் 4


*இம்மாத மலரில். . . .*

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| அன்பு அமிர்தமாகி அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு | 2 |
| லைப் டிவைன் | 10 |
| இம்மாதச் செய்தி | 16 |
| ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள் | 17 |
| சாவித்ரி | 21 |
| தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் | 23 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 24 |
| அஜெண்டா | 29 |
| பூரண யோகம் - முதல் வாயில்கள் | 31 |
| அன்பர் கடிதம் | 35 |
| மனிதனும் மிருகமும் | 38 |


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.


வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-


## ஜீவியத்தின் ஓசை

**முறையைக் கைக்கொண்டால் மூலத்தைக் கருது. மூலத்திலுள்ள பொழுது முறைக்கு முக்கியத்துவம் கொடு.**

**திருவுள்ளத்திற்கு காத்திருந்தால் நிலைமை மாறும். அல்லது அசரீரி கேட்கும்.**

**எந்தப் பண்பு என்பதைவிட எவ்வளவு பவித்திரமாக அதைப் பின்பற்றுகிறோம் என்பது முக்கியம்.**

**சிறியதா, பெரியதா என்பதில்லை. சரியா, சரியில்லையா என்பதே கேள்வி.**

# அன்பு அமிர்தமாகி,
# அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## நீங்களும் நானும்

***(இருவர் அன்பால் நெருங்கி ஆர்வத்தால் செழித்து வாழ்வை அருளால் நிரப்ப விரும்பினால் அவர்கட்குரிய பக்கம் இது).***

✡ இது ஒரு புனித உறவு.

புனிதமான உறவு, புரிய முடியாதது.

நினைக்காதே, உணராதே.

வாழ்வை அப்படியே ஏற்றுக்கொள்.

வாழ்வதே முக்கியம், நினைவும் உணர்வுமல்ல.

நினைவழிந்து, மெய்மறந்து, பரவசமாகி, நெகிழ்ந்த அகவாழ்வு நமக்குரியது. கசப்பு விருப்பாவது, ஆபத்து அமிர்தமாவது, அசிங்கம் அன்பாகும்.

வாழ்வின் சிறப்பு நம் உறவு.

உன் பாதம் எனக்குப் புனிதமானது.

அதன் உயர்வு உணர்வுக்குரியது.

அகவாழ்வில் மனமும் ஆத்மாவும் நினைவால் புனிதப்படுகின்றன.

எதையும் நல்லதாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வுறவில் நினைவு நுழையக் கூடாது.

உணர்வே சிறக்க வேண்டும்.

உணர்வெல்லாம் உயரும் உணர்வாக அமைய வேண்டும்.

எவரோடும் நம் நிலையை ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது.

இந்த உறவில் யோகம் பலித்துப் பூரணமாகும்.

ஒருவர் அடுத்தவரை சரணடைவதே தேவை.



"**அற்புதம் அன்றாட நிகழ்ச்சி**"யாவதைக் காணலாம்.

மனித வாழ்வின் சுவையைக் கடந்தது. ஷேக்ஸ்பியர் இதை (milk of human kindness) மனித உறவில் அமிர்தம்என்றார்.

இந்த உறவு கணவன் மனைவி, நட்பு ஆகியவற்றைக் கடந்த உறவு.

நெஞ்சு விம்மி, சந்தோஷமாகப் பரவி, காரணமின்றி இனிக்கும்.

இனிய நெஞ்சம் இதமான ஆரோக்கியம்.

உணர்வு செறிந்தால் உடல் நலம் உயரும்.

உலகம் பெரியது, உள்ளே காண்பது, உத்தமமானது.

நாலுபேர் புரிந்து கொள்வதன்று இந்த உறவு.

இது உறவன்று, உள்ளத்தின் ஐக்கியம்.

உள்ளம் உண்மை, அது மட்டும் உண்மை.

"உள்ளதெல்லாம் நீயே" என்பது பகவானுடைய மந்திரம்.

அதுவே நமக்குரியது.

உள்ளேபோ. உன்னைக் கண்டுபிடி, பரந்து பிரபஞ்ச முழுவதும் பரவ வேண்டும்.

அதுவே உண்மையான வாழ்வு. சந்தோஷம் எழும். அலையலையாக வரும்.

உள்ளே எழும் பிரவாகம் உயிரைப் புனிதமாக்குவது.

ஒரு துளி உணர்ச்சியுள்ளவரை உலகம் நம் கையில்.

உயர்ந்தது மட்டும் உறையும் உலகமிது.

தாழ்ந்தது தானே கரைவது தகுதிக்கு அடையாளம்.

**நெஞ்சில் ஊறும் அன்பு வாழ்வை அன்னையாக்கும்**.

## சத்தியம்.

✡ சத்தியம் பெரியது.

சத்தியம் எரிக்கும்.

நம் பொய்யை சத்தியம் எரிக்கும்.

சத்தியம் நித்தியம்.

சத்தியத்தை ஏற்ற அரிச்சந்திரன் படாதபாடு பட்டான்.

அன்னை மெய் சொல்பவர்க்கு (Sunlit path) ஒளிமயமான பாதையை வழங்குகிறார்.

இந்த யோகத்தில் அன்னை பட்டபாடு பெரிது.

இந்த யோகம் செய்யும்படி யாரையும் நான் அழைக்க மாட்டேன் என்றார் அன்னை.

யோகத்தால் உடல் வெந்தது. எந்த நேரமும் ஓலமிடத் தோன்றியது என்கிறார் அன்னை.

யோகத்தில் பகவானைக் கடந்து சென்றார்.

அவர் செய்தவரை அன்னைக்கு சிரமமேயில்லை.

அவர் சாதனையைக் கடந்தபொழுதுதான் கஷ்டம் வந்தது.

அது நெருப்பாற்றில் எதிர்நீச்சல் நீந்துவதுபோன்றது.

ஸ்ரீ அரவிந்தரும், அன்னையும் செப்பனிட்ட பாதை நமக்கு இனிமையானது.

கஷ்டம் அவர்களைக் கடந்து போகும்பொழுதுதான்.

சத்தியம் சத்திற்குப் புறம்.

ஜோதி சத்தியத்தின் பகுதி.

ஆன்மீக ஒளிமுன் நடுப்பகல் காரிருளாகத் தோன்றும்.

ஆன்மீக இருட்டுமுன் நள்ளிரவு ஒளிமயமாகும்.

சூரியனுடையது ஒளியன்று. அது ஆன்மீக ஒளியின் பிரதிபலிப்பு.

உள்ளே சூரியன் உதித்தால் உலகமே ஜோதியாகும்.

சத்தியம் பேசி, சத்தியத்தை நினைத்து, சத்தியமாய் வாழ்ந்தால், அகத்தில் சூரியன் உதயமாகும். அது ஞானோதயம், ஆன்மீக சூரியோதயம்.

உள்ளே ஆதவன், பகலவனாக, பாஸ்கரனாக உதித்தால் வாழ்வு ஆன்மீக வாழ்வாகும்.

சத்தியம் அல்லது பாதாளம்என்றார் அன்னை.

நினைக்க, தீர்மானிக்க, பேச சத்தியம் மட்டும் தேவையென முடிவு செய்ய வேண்டும்.



உள்ளே ஒரு புரட்சி எழும். அது ஆன்மீகப் புரட்சியாகும்.

புரட்சி மலர்ச்சியாக சத்தியம் பிடிக்க வேண்டும்.

நித்தியமான சத்தியத்தை நிலையாக ஏற்க மனம் நினைப்பை நிதர்சனமாக்குவது வாழ்வில் அன்னை உதயமாவது.

**அன்னை சத்தியம்; அன்னை மட்டும் சத்தியம்.**

## வாழ்வின் எதிரொலி
## (Life Response)

✡ **சூழ்நிலை நம்மைப் பிரதிபலிக்கிறது.**

i. **என் கெட்ட குணம் கெட்ட மனிதனை என்னிடம் கொண்டு வருகிறது.**

ii. **அது பிரதிபலிப்பு, தற்செயலானது, அதற்கு முக்கியத்துவமில்லை, வெறும்பிரதிபலிப்பு, நமக்கு எந்தப் பங்குமில்லாமல் நம் குணம் பிரதிபலிக்கும்.**

iii. **டாக்டரிடம் வியாதியஸ்தர் வருவதுபோல் கெட்டவர் நல்லவரிடம் வருவார். அன்பரிடம் நல்லது அதிகமாக இருப்பதால் அவரிடம் வந்து திருவுருமாற அவர்கள் வருகிறார்கள்.**

**நாம் நம்மை எந்த நிலையில் வைக்கிறோம்என்பது நம் உண்மையைப் (sincerity, truthfulness) பொருத்தது. ஒன்றை மூன்றாகவும் கருதும் மனம் உண்டு.**

❀ **இந்த மூன்றாம் நிலையிலும் மனித சுபாவம் உண்மையாகும்.**

**நான் நல்லவனாகவேயிருப்பதால் என்னிடம் வந்து தான் நல்லவனாக மாற அடுத்தவன் வந்தது உண்மையானாலும் அது மேல்மனத்தில் (surface mind) ஜீவியத்திற்கு (consciousness) உரியதாகும். அதேபோல் 8 நிலைகளுண்டு. இரண்டாம் நிலைக்குப் போனால் மூன்றாம் கட்டம் (நல்லவன்) முதற்கட்டமாகும் (கெட்டவனாகும்).**

✡ **செயலின் சுபாவம் (character) எதுவானாலும் - நல்லது, கெட்டது - செயல்என்ற அளவில் அதற்கு உயிர் உண்டு.**

**என்னை துரோகம் செய்தவர் ஒரு நண்பர். நெருங்கிய நண்பராக இருந்து, நான் நம்பியதால் என்னை முழுத்துரோகம் செய்தவர், இவர் 34ஆம் வயது வரை திருமணம் செய்து கொள்ளவில்லை. நான் இவருடைய அபிப்பிராயம் மூட நம்பிக்கைஎன எடுத்துக் கூறியதால் 34ஆம் வயதில் திருமணம் செய்து கொண்டார். இவர் அண்ணன்மீது வந்த அரெஸ்ட் வாரண்டை ரத்து செய்ய நான் முயன்றேன். நண்பர் நேர் துரோகியானார். நேரடியாகப் பல பெரிய தொந்திரவு செய்தார். என் அந்தஸ்து உயர்ந்த பிறகு அடக்கமாக என்னை நாடி வந்தார். நான் முகம் கொடுத்துப் பேசவில்லை. வந்துவிட்டேன். அங்கிருந்து ½ பர்லாங் என்னுடனே வந்து நான் காரில் ஏறும்வரை நின்றிருந்து, கார் புறப்பட்டபின் போனார். நான் ஏறிட்டுப் பார்க்கவில்லை. இவர் துரோகம் செய்ததால், இவரிடம் பிரியமாகப் பேசினால், மீண்டும் இவரால் துரோகம் செய்ய முடியும். கொஞ்ச நாள் கழித்துப் பழைய நண்பரை ஆசிரம வாயிலில் கண்டு, சமாதிக்கு அழைத்துப் போனேன். வெளியில் வந்து வழியனுப்பினேன். அவர் காரில் உட்கார்ந்து என்னிடம் விடை பெறாமல், என்னை நிமிர்ந்து பார்க்காமல் போனார். நான் என் துரோகிக்குச் செய்ததை அவர் எனக்குச் செய்தார். இவருக்கு என்மீது வெறுப்பு, பகையில்லை.**

- ❀ ***ஆனால் செயல் அப்பட்டமாகத் திரும்பி வருகிறதுஎன்பது உண்மை.***
- ❀ ***செயலின் உருவம் உணர்ச்சியினின்று பிரிந்து தனித்துச் செயல்படுகிறது.***

✡ **நாம் உலகை விட்டகன்றபின் மட்டமான உலகம் நம்மை விட்டகல்கிறதுஎனத் தெரியாமல் நாம் மீண்டும் அதை நாடுகிறோம். அது அறியாமையைப் பேணுவது.**

✡ **தீமையே உருவானவரும் நல்லது செய்வார். அது அருள் செயல்படும் வகை.**

***சுபாவமே தீமையானதானால் அவர்களால் கெடுதல் செய்யாமலிருக்க முடியாது. அவர்களை மீறிச் செய்ய ஆரம்பித்தால் நல்ல சொல் வாயால் வாராது. நல்ல செயலைக் கை செய்ய மறுக்கும்.***

**அன்னை அன்பர்களுக்கு அப்படிப்பட்டவரும் தானே விரும்பி,**



**முனைந்து நல்லது செய்வதைக் காணலாம். தீயவர் நம் வாழ்வில் வருவதில்லை. தானே வந்தால், அவர்களைவிட்டு விலகாமல், ஏற்றுக் கொண்டால், நம் ஆழ்ந்த சுபாவத் தீமை திருவுருமாறும்.**

***அந்த நிலையில் தீமையே உருவகமானவர் கற்பனைக்கெட்டாத பெரிய நல்லதை நமக்குக் கேட்காமல் வலியச் செய்வார். இது என் அனுபவம்.***

**யானை வாயில் போன கரும்புபோலஎன்பது பழமொழி. அன்பருக்கு அதுவும் புதிய அனுபவத்தைத் தரும்வழி மீண்டும் வரும். நமக்கு வேலை முடியுமிடத்தில் எதிரிக்குச் செல்வாக்கிருந்தால் அந்த வேலை கெடும். நம் வேலைக்கு அனுமதியளிப்பதே எதிரியானால், அந்த வேலை என்னவாகும்? எதிரி தலைமை தாங்கிச் செய்யும் வேலையிலும் அன்பர் வேலை குறைவர நடப்பது என் அனுபவம்.**

**பாவம் பாவமே; பாவம் பாவமில்லை; பாவம் புண்ணியம்என்று மூன்று நிலைகளில்**

**முடிவு மனநிலையைப் பொருத்தது.**

***செயலைப் பொருத்ததில்லை.***

## மறுத்துப் பேசுவது

✡ இது மனிதன் குணம் - உலகில் இல்லாத இடமில்லை.

மறுத்துப் பேசுவது தவறுஎன நெடுநேரம் பேசுபவர் அந்த நேரம் மற்றவரை மறுத்துப் பேசுவதையறியார்.

- ❀ அறிவு எழுவதின் நிலைகள்.

  **Observation**, தன்னைச் சுற்றி நடப்பதைக் கவனிப்பது.

  **Reflection**, அதைப் பற்றிச் சிந்திப்பது.

  **Understanding**, ஒரு முடிவுக்கு வருவது.

  **Negative thinking**, முடிவுக்கு வருமுன் உள்ளதை இல்லைஎனக் கூறுவது.

சிந்தனை பூரணமாக ஒரு பிரச்சினையின் இரு புறங்களையும் அறிய வேண்டும். அதன் முதற்படி ‘இல்லை’ என்பது. அடுத்த கட்டம் ‘உண்டு’ என்பது. முடிவாக இரண்டும் சேர்ந்து நம் அபிப்பிராயமாக மாறுகிறது. எனவே சிந்திக்க ஆரம்பிக்கும் முதற் கட்டத்தில் மனிதன் ‘இல்லை’

என்பான். அதாவது மறுத்துப் பேசுவான். மறுத்துப் பேசுவதுஎன்றால் மனிதன் சிந்திக்க ஆரம்பித்துள்ளான்என்று பொருள்.

**உள்ளதை இல்லையென்பது மறுத்துப் பேசுவது.**

**மறுத்துப் பேசுவது மனம் சிந்திக்க ஆரம்பிப்பது.**

மறுத்துப் பேசுகிறான்எனப் புரிந்து கொண்டால் வரும் கோபம் அவன் சிந்திக்க ஆரம்பித்து விட்டான்எனப் புரிந்தால் கோபம் தணியும்.

✡ குறுக்கே பேசுவதும் மறுத்துப் பேசுவதும் ஒரே தரத்தவை.

தானும் கலந்துகொள்ள வேண்டும் ஆசை குறுக்கே பேசச் சொல்கிறது.

[இக்குணமுள்ளவர், இதை அறவே அழிக்க முயன்றால் அவர் 60, 70 வயதில் பெறும் பலனை 20 வயதில் பெறுவார். அவரறிந்தவரில் மிக உயர்ந்தவர் நிலையை அடைவார். அதிகபட்ச முன்னேற்றம் (**Maximum possible progress**)* என்பது பல தரத்தன.]

1. பெற்றோரிடமிருந்து பெற்றது.
2. அவனுடைய திறமை தருவது.
3. அவன் ஆழ்ந்து வெளிப்படாத திறமை தரக் கூடியது.

சமூகம் தரும் வாய்ப்பைப் பெரும்பாலோர் பெறுவதில்லை.

நான் B.A. பட்டம் பெற உதவிய தமிழ்ப் பண்டிதர் தம் முயற்சியால் M.A.யும், B.T.யும் பெற்றதால் தலைமையாசிரியரானார். சமூகம் அந்த வாய்ப்பைத் தந்தாலும் அவர் போன்ற 100 பேரில் அவர் மட்டுமே அதைப் பெற்றார்.

இலட்சியமும் சொற்பொழிவு ஆற்றும் திறமையும் என் பேராசிரியரை வைஸ்சான்ஸசலருக்கு அடுத்த நிலைக்கு உயர்த்தியது. தமிழ்நாட்டில் (educationist) கல்வித்துறையில் பிரபலமாக்கியது.

P.C.அலெக்ஸாண்டர் நேர்மையால் உயர்ந்தார்.

P.C.அலெக்ஸாண்டர் I.A.S. எழுதியபொழுது அவருடன் அதே தகுதியுள்ள 30 பேர் பரீட்சை எழுத முன்வரவில்லை.

---

* இச்சொல் வருமிடங்களில் இதே பொருளில் இனி வரும்.



அன்பர்களில் (Silent will) மௌன சக்தியை ஏற்றுப் பெரும்பலன் பெற்றவர் நாட்டில் பெருந்தொழிலதிபரானார்.

மௌனசக்தியை அதுபோல் அன்பர்கள் ஏற்றுப் பலன் பெறுவதில்லை. *அன்பராக இருப்பதின் பலனைப் பெருமளவு பெறுபவர் குறைவு. நானறிந்தவரை முழுப்பலனை அறிந்தவரேயில்லை. அன்னைச் சூழலின் சக்தியை அவருடனிருந்தவர்களிடம் பேசினால் அவர்கள் நம்புவதில்லை.* கேலி செய்வர்.

குணம் தலைகீழே மாறினால் இது போன்ற முன்னேற்றமுண்டு.

அதன் அளவு பர்சனாலிட்டி personalityயால் நிர்ணயிக்கப்படும்.

*தொடரும்....*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தன்னையே ஒளித்து, மீண்டும் காண்பதே இருப்பதில் பேரின்பம்என்கிறார் பகவான். தடங்கலைத் தாண்டி வருவது இன்பம் துய்க்க, பெரிய வாய்ப்புகளை அளிக்கிறது. இதை, தெரிந்தும் செய்யலாம்; தெரியாமலும் செய்யலாம். நம் உரிமைகளை, குழந்தைகள், மனைவி, கீழுள்ளவர்களுக்குக் கொடுத்து, அதை ஒரு கொள்கையாகப் பின்பற்றி அவர்கள் செயலை அனுபவிப்பது இம்முறையின் சிகரம். அதைவிட உயர்ந்தது, அவர்கள் தவறாக அவ் உரிமையைப் பயன்படுத்துவதை நாம் ரசிப்பது. அதன் ஆன்மிக உச்சம் ஈஸ்வரன் சக்திக்குச் சரண் அடைவதாகும். பிரச்சினைகளும் சிரமங்களும் நாம் கண்மூடித்தனமான லீலையில் ஈடுபட்டதைக் குறிக்கும்.

***குடும்பத்தினர்தவறு ருசிக்குமானால் மனிதன் பிரம்மமாகிறான்.***

# லைப் டிவைன்

கர்மயோகி

## XIX. Life

We see what Mind is in its divine origin. Page No.173
It is related to the Truth-Consciousness. Para No.01
Mind is the highest of the three lower principles.
They constitute our human existence.
It is a special action of divine consciousness.
It is the final strand of the whole creative action.
The *Purusha* has the relations of different forms and forces of himself to each other.
Mind enables the *Purusha* to hold apart those relations.
It creates phenomenal differences.
They take the appearance of radical divisions.
It is so to the individual soul.
Because it has fallen from the Truth-Consciousness.
It is the original perversion.
It is the parent of all the resultant perversions.
They impress us.
They do so as contrary dualities.
They are the opposition proper.



## 19. வாழ்வு

மனத்தின் தெய்வீக ஆரம்பத்தை நாம் காண்கிறோம்.
மனம் சத்தியஜீவியத்துடன் தொடர்பு கொண்டது.
கீழ்உலகின் மூன்று லோகங்களில் உயர்ந்தது மனம்.
இதுவே மனித வாழ்வு.
தெய்வீக ஜீவியத்தின் சிறப்பான செயல் மனம்.
சிருஷ்டியின் முழுமையில் முடிவான கட்டம் மனம்.
பல ரூபங்களும் சக்திகளும் தங்களுக்குள் தொடர்பு கொண்டன.
இவை புருஷனுடையவை.
இத்தொடர்புகளின்று பிரிந்து நிற்க புருஷனுக்கு மனம் உதவுகிறது.
தோற்றத்தில் மாறுபாடுகளை மனம் உண்டுபண்ணுகிறது.
தோற்றத்தைத் தீவிரப் பிரிவினையாக அவை கொள்கின்றன.
ஜீவாத்மாவுக்கு அப்படித் தோன்றுகிறது.
சத்தியஜீவியத்திலிருந்து பிரிந்ததால் அப்படித் தோன்றுகிறது.
இதுவே குதர்க்கத்தின் ஆரம்பம்.
பின்னால் எழும் எல்லாக் குதர்க்கங்களுக்கும் இதுவே தாய்.
நமக்கு இப்படித் தோன்றுகிறது.
இவை முரண்பாடான இரட்டையாகக் காட்சியளிக்கிறது.
இதுவே முறையான எதிர்ப்பாகும்.

It is an opposition to the life of the Soul.
It is the Soul in the Ignorance.
It is not separated from the Supermind in the beginning.
Then, it supports the various workings of Truth.
They are the workings of the universal Truth.
It, then, does not support the perversions and falsehood.

Mind appears as creative cosmic agency. Page No.173
Our normal mentality is different. Para No.02
We regard Mind as a perceptive organ.
It perceives what is already created.
It is created by Force working in Matter.
We allow Mind an origination.
We allow to it a secondary creation.
It is of new combined forms.
We are recovering some old knowledge.
Science is helping us.
That shows a new insight.
There is a subconscious Mind in Matter, it says.
It is at work and aims at emergence.
It emerges first in the forms of life.
Secondly it comes in the forms of mind itself.
First, it is seen in the nervous consciousness.
It is in the plant life.
Also it is in the primitive animal.
Secondly it is in man and the evolved animal.
It is there we see the ever-developing mentality.
Matter is only substance form of Force.
We saw it already.
Now, we make another discovery.



இது வாழ்வுக்கும் ஆத்மாவுக்கும் உள்ள எதிர்ப்பு.
இது அஞ்ஞானத்தின் ஆத்மா.
ஆரம்பத்தில் இது சத்தியஜீவியத்தினின்று பிரியவில்லை.
சத்தியத்தின் பல கூறுகளை அது ஆதரிக்கிறது.
அவை பிரபஞ்ச சத்தியத்தின் அம்சங்கள்.
அப்படியானால், அது பொய்யையும், குதர்க்கங்களையும் ஆதரிப்பதில்லை.

பிரபஞ்சத்தில் மனம் சிருஷ்டியின் கருவியாகத் தோன்றுகிறது.
நாம் பொதுவாக மனத்தை அப்படி அறிவதில்லை.
மனம் அறிவின் கருவிஎன நாம் அறிவோம்.
சிருஷ்டிக்கப்பட்டதை அறிவது மனத்தின் திறன்.
சக்தி ஜடத்தில் செயல்படுவதால் அவை சிருஷ்டிக்கப்படுகின்றன.
மனத்திற்குச் சொந்தமான சக்தியுண்டுஎன நாம் கொள்கிறோம்.
அது இரண்டாம்பட்ச சிருஷ்டி.
அது புதிய இணைந்த ரூபங்கள்.
பழைய ஞானத்தை நாம் மீண்டும் கண்டுபிடிக்கிறோம்.
விஞ்ஞானம் உதவுகிறது.
இதற்குப் புதிய ஞானம் உதயமாகியுள்ளது.
ஜடத்தில் ஆழ்ந்து புதைந்துள்ள மனம் உண்டுஎன விஞ்ஞானம் கூறுகிறது.
அது வேலை செய்கிறது. புறப்பட்டு வெளியே வருகிறது.
முதலில் அது வாழ்வின் வடிவங்களாக வெளிவருகிறது.
அடுத்தாற்போல் அது மனத்தின் உருவமாகவே வருகிறது.
முதலில் அது உயிரின் ஜீவியத்தில் காணப்படுகிறது.
அது தாவர வாழ்வு.
இது வளர்ச்சியற்ற விலங்குகளிலும் உண்டு.
அடுத்தாற்போல் இது மனிதனிலும், வளர்ந்த மிருகங்களிலும் உண்டு.
இங்கே தொடர்ந்து வளரும் மனப்பான்மை தெரியும்.
ஜடம்என்பது பொருள் பெற்ற உருவம்.
நாம் அதை ஏற்கனவே கண்டோம்.
இரண்டாம் புதிர் விளங்குகிறது.

It is material force is energy-form of Mind.
Material force is subconscious Will, its operation.
Will works in us.
It works in what seems to be light.
In truth, it is no more than half-light.
Material force works in us.
It does so in what seems to us darkness.
It is of unintelligence.
They are in essence the same.
Materialistic thought felt it instinctively.
It saw from the lower or wrong end.
Spiritual knowledge works from the summit.
It discovered it long ago.
Therefore the subconscious Mind created this material world.
It is Intelligence.
It manifests Force as its driving-power.
It is its executive Nature.
It is *Prakriti*.

*Contd…*

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

துரோகத்திற்குப்பின் அன்னையைக் காண்பது, தன்னுள் அன்னையைக் காண்பதாகும். எனவே மனிதனுடைய துரோகம் அன்னைக்கு விஸ்வாசமாக மாறக்கூடும்.

***அன்னையை துரோகத்தில் காண அகக்கண் விழிக்க வேண்டும்.***



ஜடசக்திஎன்பது சக்திரூபம், மனத்தின் சக்திரூபம்.
ஆழ்மனம் உறுதி பூண்பது ஜடசக்தி.
உறுதி நம்மில் வேலை செய்கிறது.
ஒளியாகத் தோன்றுவதில் அது வேலை செய்கிறது.
உண்மையில் அது பாதி ஒளி.
ஜடசக்தி நம்மில் வேலை செய்கிறது.
நாம் இருள்என அறிவதில் அது வேலை செய்கிறது.
இது அறிவற்றது.
சாரத்தில் இரண்டும் ஒன்றே.
நாத்திகவாதி அதை இயல்பாகக் கண்டான்.
கீழிருந்து தவறான பாதைமூலம் இதைக் கண்டெடுத்தான்.
ஆன்மீக ஞானம் மலையுச்சியிலிருந்து வேலை செய்கிறது.
இவ்வுண்மையை அது நெடுநாளைக்குமுன் கண்டு கொண்டது.
இந்த ஜடஉலகை ஆழ்மனம் சிருஷ்டித்தது.
அது அறிவு.
சக்தியை அது தன்னை உந்தும் சக்தியாக வெளிப்படுத்துகிறது.
அதன் சக்தியைச் செயல்படுத்தும் இயற்கை இது.
இதைப் பிரகிருதி என்கிறோம்.

*தொடரும்....*

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

மன்னிக்க முடியாத பாவமான குற்றத்தை உனக்கிழைத்தவர் அதைச் செய்யும் காரணமாக நீயே இருந்தாய்என அறிவது உணர்வின் உண்மை.

***உனக்கு வரும் பாவத்திற்கு நீயே காரணம்.***

## இம்மாதச் செய்தி

**வேதம் ஆண்டவனை மனிதன்**

**அனுபவிக்க வேண்டிற்று.**

**ஸ்ரீ அரவிந்தம் மனிதனை**

**ஆண்டவன் அனுபவிக்க**

**வேண்டும் என்றது.**

**அந்த அனுபவம் பெற்றவர்**

**இராமலிங்க சுவாமிகள்.**



# ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

என். அசோகன்

481. ஆண்கள் கெட்டுப் போவதைக் கண்டுகொள்ளாத சமூகம் அதே தவற்றிற்காகப் பெண்களை கடுமையாகத் தண்டிக்கிறது. சமூகம் ஆணாதிக்கம் நிறைந்ததுஎன்பதற்கு இதுவே நல்ல நிருபணமாகும்.

482. வயதான காலத்தில் தம்பதியரில் இருவரில் யாரேனும் ஒருவர் மறைந்தாலும் அடுத்தவர் நீண்ட காலம் இருப்பதில்லை. வயோதிகத்தில் துணையின்றி இருத்தல் பொறுக்க முடியாமல் இருக்கிறது.

483. திருமணம் ஆனவர்கள், திருமணம் ஆகாமலிருப்பவர்களைவிட அதிக நாட்கள் உயிரோடு இருக்கிறார்கள். துணையோடு இருப்பது ஆயுளை நீட்டிக்கிறதுஎன்று இதிலிருந்து தெரிகிறது.

484. இந்தியாவில் வயதான பெற்றோர்களைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு அவர்களுடைய பிள்ளைகளுக்கு இருக்கிறது. ஆனால் மேலை நாடுகளில் வயதான காலத்தில்கூட பெற்றோர்கள் பிள்ளைகளுடன் இருக்காமல் முதியோர் இல்லங்களைத் தேடிப் போகிறார்கள். அந்நாடுகளில் இளைய தலைமுறையும் மூத்த தலைமுறையும் சேர்ந்திருக்க முடியாத அளவிற்குத் தனி நபர் சுதந்திரம் மற்றும் தனிமை ஆகியவை வளர்ந்து விட்டன.

485. வயதானவர்கள் இந்தியாவில் ஆசிரம வாழ்க்கையை நாடிப் போகிறார்கள். சாதாரண வாழ்க்கையைவிட ஆன்மாவை தேடிப் போவது மிகவும் கடினமான விஷயம். வயதான காலத்தில் energy level எல்லாம் குறைந்திருக்கும்பொழுது ஆன்மாவை வெல்ல முடியும்என்று நினைப்பது அறிவில்லாத எதிர்ப்பார்ப்பாகும்.

486. பண்பாடற்ற குடும்பங்களில் தம்முடைய சொத்தை முன்னமே பிள்ளைகளுக்குப் பிரித்துக் கொடுக்கும் பெற்றோர்கள்

பிள்ளைகளால் உதாசீனப்படுத்தப்படலாம். ஆனால் பண்பு நிறைந்த குடும்பங்களில் அப்படி, சொத்தைப் பிரித்துக்கொடுத்தாலும் பிள்ளைகளுடைய கவனமோ, மரியாதையோ குறையாது.

487. மகளின் வருமானத்தை வைத்துக் குடும்பம் நடத்தும் பெற்றோர்கள் அதன் காரணமாக அவளின் திருமணத்தைத் தாமதிக்க வாய்ப்புண்டு. பண்பாடற்ற குடும்பங்களில் இந்த ஆபத்து அதிகம். பண்பு நிறைந்த குடும்பங்களில் மகளின் வருமானத்தில் வாழ்வதை விட உரிய காலத்தில் அவளின் திருமணத்தை நடத்தவே அவர்கள் விரும்புவார்கள்.

488. பெண் பார்க்கவரும் வரன்களிடம் ஒன்றன்பின் ஒன்றாக மகளைக் கொண்டு வந்து காட்டுவது சம்மந்தப்பட்ட பெண்ணிற்குச் சங்கடமாக இருக்கலாம்.
ஆனால் கல்யாணம்தான் எல்லாம்என்று இந்தியப் பெண்களுக்கு போதிக்கப்படுவதால் எந்த அசௌகரியம் மற்றும் சங்கடத்தையும் அவர்கள் எதிர்கொள்ளத் தயாராகிவிடுகிறார்கள்.

489. உற்றார், உறவினர்கள் கொடுக்கும் நிர்ப்பந்தத்தின் காரணமாகவே பல பெற்றோர்கள் உரிய காலத்தில் பிள்ளைகள் திருமணத்தை நடத்திவிடுகிறார்கள். உற்றார் உறவினர்கள் விசாரிக்காமல் இருந்தால் பல பெற்றோர்கள் பிள்ளைகள் திருமணத்திற்காக நடவடிக்கைகள் எடுக்காமல் இருப்பார்கள்.

490. இந்தியாவில் சகோதரிகளுக்குத் திருமணம் செய்து வைக்கும் பொறுப்பு சகோதரர்களுக்கு இருக்கிறது. கூட்டுக்குடும்ப வாழ்க்கையின் அடையாளம் இது.
மேலை நாடுகளில் இத்தகைய எதிர்ப்பார்ப்பு இல்லை. தனிநபர் சுதந்திரம் அங்கு அதிகமாக இருப்பதால் ஆண்பிள்ளைகளைப் போலப் பெண்பிள்ளைகளும் திருமண விஷயத்திலும் சுதந்திரமாகச் செயல்படுகிறார்கள்.

491. அன்னையைப் பொருத்தவரையில் ஓர் ஆணும், பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்புகிறார்கள் என்றால் அவர்கள் சேர்ந்து வாழ்வதற்குத் திருமணம்என்ற சடங்கு தேவை இல்லை. ஆனால்



அன்னைக்கு சரியான விஷயம் முறைகளையும், சம்பிரதாயத்தையும் வலியுறுத்தும் சமூகத்திற்கு அது ஒத்து வாராமல் இருக்கிறது.

492. திருமணவாழ்க்கை கசந்தால் மேலை நாடுகளில் விவாகரத்து பண்ணிக்கொள்கிறார்கள். இங்கே - இந்தியாவில் - மனம் கசந்து விட்டதுஎன்றாலும் வெளிப்படையாகப் பலபேர் விவாகரத்து செய்து கொள்வதில்லை. ஊர் உலகத்திற்காகவும் பிள்ளைகளுக்காகவும் சேர்ந்தே இருக்கிறார்கள். இப்படி இருக்கும்பொழுது திருமணத்தின் சாரம்போய் தோற்றம் மட்டும் மிஞ்சுகிறது.

493. ஊர் உலகத்திற்காக இல்லாமல் குழந்தைகளுக்காவது சேர்ந்திருக்கின்ற தம்பதியர்கள் அந்த அளவிற்கு உயர்ந்தவர்களா-கிறார்கள்.

494. கணவனோ அல்லது மனைவியோ அடுத்தவரை திருப்திபடுத்த முயல்வதுஎன்பது ஓர் அறிவில்லாத வேலையாகும். மனிதனுடைய ஆசைக்கு அளவில்லைஎன்பதால் அவை தொடர்ந்து வளர்ந்து கொண்டே இருக்குமேதவிர ஆசைகள் நிறைவு பெறுவதில்லை.

495. வயதில் சிறிய பெண்களை கல்யாணம் செய்து கொண்டால் அடங்கி இருப்பார்கள்என்று எண்ணிப் பல ஆண்கள் இப்படித் திருமணம் செய்துகொள்கிறார்கள். ஆனால் ஆண்மகன் மன உறுதி அற்றவனாக இருந்தால் வயதில் இளைய மனைவியும் அதிகாரம் செய்வாள்.

496. கணவனுக்கு உண்மையாக இருக்கின்ற மனைவி கணவன் வசதியாக இருந்தாலும், வசதி குறைந்தாலும் கணவன்கூடவே இருப்பாள். கணவனுடைய வருமானம் குறைவதால் அவரைவிட்டு விலகுபவர் மனைவியாக நடந்துகொள்ளாமல் விலைமாதுபோல் நடந்து கொள்கிறாள்.

497. வருமானம் உயரும்போது பல ஆண்கள் மனைவி போக இன்னொரு துணையும் தேடுவதுண்டு. கையில் நிறைய பணம் இருந்தாலும் அம்மாதிரி தவறான பாதையில் போகாமல் இருப்பதற்கு நிறைய கட்டுப்பாடு தேவை.

498. பல இந்திய மனைவிமார்கள் வெளியில், பொதுஇடங்களில் கணவன்மார்களுக்கு அடங்கி இருப்பதுபோல் நடந்து கொள்வார்கள். ஆனால் தனியாக வீட்டில் இருக்கும்பொழுது இவர்கள்தான் அவர்களை அடக்கி ஆள்கிறார்கள்.

499. இந்தியப் பெண்கள் திருமணம் ஆகும்பொழுது திருமணம்என்ற ஸ்தாபனத்திற்கே தம்மை அர்ப்பணித்துக்கொள்வதால் திருமண வாழ்க்கை கசந்து போகும்பொழுது மேலைநாட்டுப் பெண்களைப் போல அவர்களால் வெளியே வர முடியவில்லை.

500. தம் நிலையை மீறிய இடத்தில் திருமணம் செய்துகொள்ளும் பெண்கள் அந்த உயர்ந்த நிலைக்கு ஏற்றாற்போல் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். அப்படி அவர்கள் தம்மை உயர்த்திக் கொள்ளவில்லைஎன்றால் அந்த உயர்ந்த சூழ்நிலையில் அவர்களால் சந்தோஷமாக இருக்க முடியாது.

501. இந்தியப் பெண்களைப் பொருத்தவரை காதல் திருமணம்என்பது ஆபத்து நிறைந்ததாகும். நன்றாக யோசித்துச் சரியானவரைத் தேர்ந்தெடுத்துப் பழக வேண்டும். அந்த நேரத்தில் வருகின்ற காதல் வேகத்தின் காரணமாகச் செயல்பட்டிருந்தால் விஷயம் கோணலாகி சிக்கலில்போய் முடிவதற்கு வாய்ப்புண்டு.

*முற்றும்.*

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஆன்மாவைப் பொறுத்தவரை, தவறு என்பதில்லை. மனச்சாட்சி தீமையைக் கண்டதும் விலகுகிறது. சமூகம் பொது இடத்தில் தவறு நடக்க அனுமதிப்பதில்லை.

- ***ஆன்மாவுக்கு அனைத்தும் சரி.***
- ***மனச்சாட்சி தவற்றை அனுமதிக்காது.***
- ***சமூகம் தவறான நடத்தையை அனுமதிக்காது.***





## Canto Two

## The Kingdom of Subtle Matter

## சூட்சும ஜடத்தின் இராஜ்ஜியம்

## P.103 In the impalpable field of secret self

## பிடிபடாத ஆத்ம இரகஸ்ய அரங்கில்

- ✡ இச்சிறு ஜீவனின் பரந்த புறத்தின் ஆதரவு
- ✡ திருஷ்டியைத் தடைசெய்யும் பூமியின் வேலி
- ✡ மந்திரப் பளிங்கின் மாயமான வாயு மண்டலம்
- ✡ உடலறியாத வாழ்வின் உண்மையைக் கண்டு
- ✡ சூட்சுமப் பொருளை ஊனக்கண்ணுக்கு உணர்த்தும் ஒளி
- ✡ அற்புதம் அடுக்கடுக்காக எழும் அழகு மிகும் அமைப்பு
- ✡ ஜடத்தின் சூட்சுமம் மாயவித்தை செய்யும் ராஜ்யம்
- ✡ பிரகாசமான வண்ணம் எல்லை கட்டும் வானம்
- ✡ அழகின் நிஷ்டை மூடும் லேசான திரை துள்ளியெழும்
- ✡ மேதையின் விளக்கம் மேலெழும் முன்னணி
- ✡ அழகொழுகும் ரூபம் மலிந்த நமது லோகம்
- ✡ பூமியின் குருட்டுப்பார்வை மறைக்க முடியாத மாநிலம்
- ✡ உருவம் ஒளி பொருந்திய அழகு, பொருள் உண்மையின் பெருமை பெற்றது.
- ✡ மங்கிய ஒளியின் மனமறியாத புதிர்
- ✡ கண்கள் மூலம் சொர்க்கம் எட்டிப் பார்த்தது
- ✡ புல்லரிக்கும் ஸ்பர்சம், குரல் புனித இசை
- ✡ இதயம் ஆழ்ந்த மூச்சை அதிகாரமாக விட்டது

✡ புவியின் சுபாவம் அதன் ஒளிமயமான மூலத்தைக் கண்டது
✡ தன் கடமையை நிறைவேற்றும் சிறப்பான திட்டங்கள்
✡ சக்தி வெளிப்பட முயலும் பிரசவ வேதனை
✡ வரையறுக்கப்பட்ட வழிமுறையின் சக்குபந்திக்குள் அமையும் உறக்கம்
✡ முயற்சியும் வீண், வெற்றியும் பலன் தாராது
✡ வரைப்படமாக நிர்ணயித்த காலவரையறை
✡ வரப்போகும் இராஜ்ஜியங்களின் உருவம்
✡ ஆசை வகுத்த அழகுநிறை ஆடைகள்
✡ சிக்கல் மிக்க சந்து பொந்தின் பொன்னான பலன்
✡ பிடிபடாத செல்வம்; கண்காணாத பொக்கிஷம்
✡ மனித எண்ணம் எட்ட முடியாத உயரத்தின் கரைபடாத கரு
✡ தெளிந்த சூழலின் அமைந்த அமைதி
✡ விவரமற்ற ஆரம்பம் விலக்கப்பட்ட இடம்.

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

இன்று நாம் பிரகிருதியால் சூழப்பட்ட அகந்தையர். அகந்தை கரைந்தபின் நாம் பரிணாம வளர்ச்சிக்குரிய சைத்தியபுருஷனாவோம். பிரபஞ்சத்தில் ஆன்மாவின் பரிணாம வளர்ச்சிக்குரிய மையம் சைத்தியபுருஷன். அதனால் பிரகிருதியிலுள்ள அன்னை, நம் சைத்திய புருஷனை நோக்கி வருவார்கள். மனமும் ஜீவனும் தன்னிறைவால் நிரம்புவது அன்னை நம்மை நோக்கி வருவதன் அறிகுறி.

***அன்னையின் வருகை.***



# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

101. *ஓடும் ஆற்று நீருக்கும் தொடக்கமாக ஓர் ஊற்று இருக்கும்.*

✡ **தொடக்கமும் முடிவுமில்லாத ஆறு அன்பர் வாழ்வு.**

102. *சினம் தன்னைத்தானே தண்டித்துக் கொள்ளும்.*

✡ **சினத்தை மனத்தின் செயலிலிருந்து பிரித்தால் அகந்தை தெரியும்.**

103. *கோபத்திற்குக் கண்ணில்லை.*

✡ **பொறுமை, நிதானம் சமர்ப்பணத்தால் கோபத்திற்கு தியானத்தின் பலன் தரும்.**

104. *கேடு தானாகவே தேடி வரும்.*

✡ **கேடு அழியும் நேரம் வந்தால் அன்பரை நாடும்.**

105. *கேடு காலத்தினால் விளையும்பயன் நன்மையே தரும்.*

✡ **அன்னைச் சூழல் காலத்திற்குக் கேடுவிளைவிக்கும் குணத்தை மாற்றிவிடுகிறது.**

*தொடரும்....*

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

ஆழ்மனத்தில் விரும்பிச் சேர்த்து இன்று மறந்தவை, பின்னர் (original ideas) புதிய கருத்துகளாக எழும்.

***விரும்பி மறந்தவை புதியதுபோல் பூக்கும்.***

# யோக வாழ்க்கை விளக்கம் V

*(மே 2009 இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**953) நீ ஒரு திட்டத்தில் நெடுநாளிருந்தால், உன் எண்ணம், நோக்கம், முடிவு ஆகியவற்றை முறைப்படுத்தினால், வெளியிலிருந்து அது போன்ற எண்ணம், நோக்கம், முடிவு உன்னை நோக்கி வருவதைக் காணலாம். அது சூட்சுமமான அமைப்பு. ஆனால் தவறாது செயல்படும். நடைமுறையில் நாடும், உலகமும் உள்ளூரிலுள்ள உன் செயலுக்கும், எண்ணத்திற்கும் பதில் கூறும் வகையில் செயல்படும்.**

***எண்ணம் சக்திவாய்ந்தது.***
***முடிவு கனமானது.***

இச்செய்தி சம்பந்தமாக அன்னை, பகவான் கூறியவை, சாதகர்கள் அனுபவம், நம் சொந்த அனுபவம், பிரபஞ்சத்திற்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பு, பூரணயோக இலட்சியம் ஆகியவற்றைக் கருதுவது நல்லது.

- ✡ உலகில் எந்த நல்லது நடக்க வேண்டும்என்றாலும், முதலில் அது ஆசிரமத்தில் நடக்க வேண்டும். (1973 வரை இது உண்மை. அதன் பிறகு இதற்கு எதிரானது உண்மையென்ற கருத்தில் அன்னை பேசியிருக்கிறார்).
- ✡ ''என் எண்ணங்களை உலகம் நிறைவேற்றத் தவறியதில்லை. நாளாகலாம், தவறியதில்லை'' - பகவான் கூறியது.
- ✡ ஆசிரம நிலங்கள் பயிராவதற்கும், இந்திய உணவு உற்பத்திக்கும் உள்ள தொடர்பு, புல் வளர்க்க வாங்கிய 100 ஏக்கர் இந்தியாவில் முதன்மையான பண்ணையானது நாட்டில் உணவு உற்பத்தியை 5 மடங்காக்கிற்று.
- ✡ தவணை விற்பனையை நாடு ஏற்கவேண்டுமென அன்பர் உருகி வேண்டி, பத்திரிகைகளில் பல முறை எழுதியது நாட்டில் தவணை விற்பனை சகஜமாயிற்று.



- ✡ ஆரோவில் உலகப்போரைத் தடுக்க ஏற்பட்ட நகரம். 1968இல் நிர்மாணிக்கப்பட்டது. 1989இல் வல்லரசு போட்டியழிந்தது.
- ✡ பாலைவனம் பயிரிட நீர்வளமிருந்தது, நாட்டில் பிரதிபலித்தது.
- ✡ வறுமையான கிராமம் வளமான கிராமமானதும், நாட்டில் சுபிட்சம் பரவுவது உண்மை.
- ✡ மனிதன் இறைவனை வழிபடுவதைவிட, இறைவனாக முயல்வது பொருத்தம் - அன்னை.
- ✡ 25 ஆண்டில் பாகிஸ்தான் உடையும்என பகவான் கூறியபடி 25ஆம் ஆண்டு பங்களாதேஷ் பாகிஸ்தானிலிருந்து பிரிந்தது.
- ✡ 1916இல் பகவான் ஐரோப்பிய நாடுகள் ஒன்று சேரும் என்றார். 50 ஆண்டு கழித்து EU ஸ்தாபனமாயிற்று.
- ✡ அன்பர்கள் ஆரம்பித்த வேலைகள் அளவுகடந்து பரவியது.
- ✡ அன்பர்கள் உள்ள இடம், தியான மையச் சுற்றுப்புறங்கள் வளம் கொழிப்பது.
- ✡ ரூ.1 கூலி பெற்றவர் இன்று ரூ.125 கூலி பெறுவது.
- ✡ ஜனத்தொகை நாட்டை பாதிக்கும்என்ற கருத்தை அன்பர்கள் ஏற்க மறுத்தார்கள். உலகம் இன்று ஜனத்தொகை செய்யும் உதவியைப் பற்றிப் பேசுகிறார்கள்.

அன்பர்கள் செயல் அன்னையின் கருவியாகி அகிலமெல்லாம் அருள் பரவ,

- ❀ **அன்பர் எண்ணம் நன்மை பயக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.**
- ❀ **அவர் எண்ணம் தெளிவின் சிறப்பைப் பெற்றிருக்க வேண்டும் (conceptually organised).**
- ❀ **அது பரநலம் பயக்கும் எண்ணமாக இருக்க வேண்டும்.**
- ❀ **அது நடைமுறையில் செயலாக மாறவேண்டும்.**
- ❀ **செயல் பயன்தரும் பக்குவமுடையதாக (organised) இருக்க வேண்டும்.**
- ❀ **அன்னை ஜீவியத்தைத் தாங்கிவரும் செயலாக அமைய வேண்டும்.**

❀ **நாட்டில் முன்னோடியின் செயலாக இருக்க வேண்டும்.**

❀ **தவறு, குறை, தீமை கலப்பற்றதாக இருக்க வேண்டும்.**

❀ **நேர்மையின் திறன் நேர்த்தியாகப் பயன்பட வேண்டும்.**

❀ **சமர்ப்பணமான செயலாக அமைய வேண்டும்.**

❀ **புதிய கருத்தாக புத்துணர்வு தருவதாக இருக்க வேண்டும்.**

❀ **நாட்டின் ஆழ்ந்த அபிலாஷையைப் பிரதிபலிக்க வேண்டும்.**

❀ **மனிதகுலத்தின் மகிமையை எடுத்துரைப்பதாக இருக்க வேண்டும்.**

❀ **செயல் திருவுருமாறும்முறை வெளிப்பட வேண்டும்.**

❀ ❀ ❀

**954) அவ்வமைப்புகள் (organisation) திறமை, எண்ணம், நோக்கம், முடிவு, பண்பு, சூட்சுமத் தெளிவு ஆகியவற்றால் அமைந்தன. அந்தந்த நிலைக்குரியன ஆங்காங்குச் செயல்படும். தேவைப்பட்டவை எல்லாம் நிறைந்தபொழுது அவை பூர்த்தியாகும். அதற்குச் சற்று முன்னும் பலன் தெரியாது.**

***கடைசி நிமிஷம்வரை பலன் கண்ணுக்குத் தெரியாது.***

✡ திறமைக்குப் பலன் உள்ளவரை கிடைக்கும்.

✡ பண்பு நிறைந்து, நிலைத்தால் பலன் தெரியும். க்ஷணம் இழந்தால் அனைத்தும் போய்விடும்.

✡ பேச்சாளர் திறமைக்குத் தகுந்த கூட்டம் வரும்.

✡ எலக்ஷனில் தேவையான மெஜாரிட்டிக்கு 1 ஓட்டு குறைந்தாலும் தோற்கும்.

✡ கடைப் பையனுக்குள்ள திறமைக்குச் சம்பளம் கிடைக்கும்.

✡ கணக்குப்பிள்ளைக்கு நாணயம் மயிரிழை தவறினாலும் வேலை கிடைக்காது.

✡ பாடகியின் திறமைக்குரிய சன்மானம் கிடைக்கும்.

✡ கற்புநிலை இழை தவறினாலும் திருமணம் நடக்காது.



✡ அளவு (quantity) உள்ளவரை பலன் தரும்.

தரம் (quality) முழுமையானால் மட்டும் பலன் தரும்.

10 ஆண்டு தவம் ஒருமுறை எழும் கோபத்தால் அழியும்.

100 ஆண்டு கர்மம் ஒரு நிமிஷ தரிசனத்தால் கரையும்.

✡ சக்தி செயலாகி, செயல் ஆயிரம் முறை மீண்டும்மீண்டும் வந்து, திறமை (skill) உற்பத்தியாகிறது. 100 முறை consecration என்ற ஆங்கிலச் சொல்லைக் கேட்டிருந்தாலும், ஆங்கில அறிவு இல்லாதவருக்குத் திரும்பச் சொல்ல வாராது. 1000 முறை கேட்டால் சொல்லும் தைரியம் வரும். வாய், 'கான்சரேஷன்' என்று கூறும். நாள்கணக்காகப் பயிற்சி எடுத்துக் கொண்டால், 'கான்சகிரேஷன்' எனச் சொல்லலாம். இதற்கு திறமை (skill) எனப் பெயர். ஆயிரம் திறமைகளைப் பெற்றவர்க்குப் பொதுவாக எதிலும் திறமை (capacity) வரும். சக்தி ஒரு சொல் வழியாக 1000 முறை சென்றால் உச்சரிக்கும் திறமை (skill) வரும். எனவே (skill) திறமைஎன்பது ஓர் அமைப்பு. (Capacity) பொதுத்திறமை பெரிய அமைப்பு.

✡ 'இந்த மேஜை விலை 1000 ரூபாய்' என்பது விஷயம் (fact). இதை அனைவரும் புரிந்து கொள்வார்கள். 'எனக்கு மேஜை தேவை இல்லை' என்பது ஓர் எண்ணம். அதனுள் பல விஷயங்கள் உள்ளன. 'நான் எழுதுவதில்லை. மேஜை எழுதுபவர்க்கே தேவை. என் வேலை வீட்டு வேலை. வீட்டு வேலைக்கும் எழுத்திற்கும் சம்பந்தமில்லை. நான் 8 வகுப்பு படித்தேன். அது 15 வருஷத்திற்கு முன். எழுதும் பழக்கம் போய்விட்டது. எழுதும் அவசியம் எனக்குக் குறைவு. அப்படி ஏற்பட்டால் யாராவது எழுதித் தருவார்கள். அதனால் எனக்கு மேஜை தேவையில்லை' - இது ஓர் எண்ணம். இதனுள் பல விஷயங்கள் அடங்கியுள்ளன. அவை சேர்ந்து (organised) எண்ணமாகின்றன.

***எண்ணம் விஷயங்கள் சேர்ந்த அமைப்பு.***

***நோக்கம் உணர்ச்சிகள் சேர்ந்த அமைப்பு.***

***முடிவு தீர்மானங்கள் சேர்ந்த அமைப்பு.***

*பண்பு நயமான நாகரீகமான செயல்கள் சேர்ந்த அமைப்பு.*

*சூட்சுமத் தெளிவு அனுபவங்கள் சேர்ந்த அமைப்பு.*

எண்ணம், நோக்கம், முடிவு, பண்பு, சூட்சுமத்தெளிவு சாப்பிடுவதற்கும், படிப்பதற்கும், உத்தரவிடுவதற்கும் மாறும். சிறிய விஷயங்களுக்கும், பெரிய விஷயங்கட்கும் மாறும்.

*அந்தஅந்த நிலைக்குரியன ஆங்காங்கு, செயல்படும்.*

வாழ்க்கையில் பலன்என்பது பலவிதம். பட்டம் பெறுவது, திருமணம் செய்வது, சொத்து வாங்குவது, பதவி பெறுவது, நல்ல பெயரெடுப்பதுஎனப் பல நிலைகளில் பலவாறான பலன்கள் உண்டு. சொத்து வாங்குவது திறமைக்குரிய பலன். திறமையுள்ள அளவுக்குப் பலிக்கும். நல்ல பெயர் எடுப்பது, நன்றி பெறுவதுஎன்பவை பண்புக்குரிய பலன். அண்ணன் ஆயிரம் நல்ல காரியம் செய்தால், நல்ல பெயர் சில சமயங்களில் தம்பிக்கு வரும். முதலாளி ஏராளமாகப் பணம் செலவுசெய்து பல நல்ல காரியங்கள் செய்தால், நன்றியறிதல் மானேஜருக்குப் போகும், சமயத்தில் எதிரிக்குப் போகும். பழி ஓரிடம், பாவம் ஓரிடம்என்பது பழமொழி. முருகன் உலகைச் சுற்றி வந்தார், விநாயகர் மாம்பழம் பெற்றார்என்பது கதை. சுருக்கமாக,

*பண்ணிய புண்ணியம் பயிரில் தெரியும்*

என்ற பழமொழி இந்நிலையை விளக்குகிறது.

✡ **பண்பு பலன்பெற பண்புக்குரிய திறமை தேவை.**

✡ **பொறுமை, நிதானம், நல்லெண்ணம், பரநலம், தெய்வ நம்பிக்கை அப்பண்புகளாகும்.**

❀ ❀ ❀

*தொடரும்*

## ஜீவிய மணி

**அலையால் அசையாத சுவர் ஆழமான சுவர்**





## Jesus ran away from an idiot. An idiot can be changed

## ஏசுநாதர் மடையனைக் கண்டு ஓடினார். மடையனுக்கும் புத்தி வரும்

– *அஜெண்டா*

“ஏசுநாதர் அற்புதங்கள் நிகழ்த்திக் கொண்டிருந்தார். ஒரு கூடையிலிருந்து மீன் எடுத்துக் கொடுத்தார். அது அட்சயப் பாத்திரமாக வளர்ந்தது. கண் பார்வையிழந்தவனுக்குப் பார்வை தந்தார். நடக்க முடியாதவன் நடந்தான். அப்பொழுது ஒருவர் ஒரு மடையனை அவரிடம் கொண்டு வந்து, “இவனை புத்திசாலியாக்க முடியுமா?” எனக் கேட்டார். ஏசுநாதர் ஓடிவிட்டார்” என்பது ஒரு கதை. கதை உண்மையா, பொய்யாஎன்பதைவிட இதனுள் தத்துவம் உண்டாஎனக் கருதலாம்.

✡ ஒருவரை எளிமையாகப் பிரதமராக்கலாம், விசா வாங்குவது கடினம் என்றார் அன்னை. அதாவது பெறுபவர் ஒத்துழைத்தால் வேலை எளிமையாகும்.

✡ மடையன் என்பவன் தத்துவப்படி மடையனில்லை. மடமையை அவன் ஆத்மா விரும்பி ஏற்று, அக்கண்ணோட்டத்தில் உலகை அறிய முயல்கிறது. பகவான் ஸ்ரீ அரவிந்தர் அறியாமை உயர்ந்த அறிவு எனக் கூறுவது நமக்குத் தெரியும்.

ஒருவருடைய ஆத்மா தேர்ந்தெடுத்த பாதையை நாம் கர்மம் என்கிறோம்.

அதில் தலையிட எவருக்கும் உரிமையில்லை. தலையிட்டால் அவருடைய கர்மம் தலையிடுபவரைப் பாதிக்கும்.

மடையன் தானே விரும்பி அறிவுபெற முயன்றால், நாம் பள்ளியில் பெற்ற அறிவைப்பெற அவனுக்கு 80 அல்லது 100 ஆண்டுகளாகும்.

அன்னைமுறையை அவன் ஏற்றால், அவனுக்கு மடமை எளிதில் நீங்கும்.

அது தொடரப்பட்டால், அவனே மேதையுமாகலாம்.

அன்னை இது விஷயத்தில் தம் அனுபவத்தை எழுதியிருக்கிறார்.

**அன்னைமுறைஎன்பது ஆத்ம சமர்ப்பணம்.**

பாஸ் செய்ய முடியாத மாணவன் 45 நாளில் முதல் மார்க் வாங்கியது எனது சொந்த அனுபவம்.

✡ இந்தியப் பொருளாதார நிபுணர் 1980இல் 'இந்தியா அமெரிக்காவாக வேண்டும்' என்று கூறியவரிடம் 'அது வீண் கனவு. 100 ஆண்டிலும் நடக்க முடியாது' என்றார்.

அன்றைய நிலையில், அவர் அறிந்த பொருளாதாரப்படி அது உண்மை. இன்று 2025இல் இந்தியா ஜெர்மனியைத் தாண்டும்என்று அமெரிக்கப் பொருளாதார நிபுணர்கள் கூறுகிறார்கள். 2050இல் உலகில் மூன்றாம் நாடாக இருக்கும் என்கிறார்கள். இதன் உண்மை என்ன?

அபிவிருத்திஎன்பது படிப்படியாய் வருவது. அதற்கு நாளாகும்.

திருவுருமாற்றம்என்பது தான் உள்ள நிலையை அறிந்து, மனதால் ஏற்று, தலைகீழே - எதிராக - மாற ஒருவர் முடிவு செய்தால்,

***ஏழ்மையை உருவாக்கும் சக்திகள் உள்ளே மாறி***

***செல்வத்தை உருவாக்கும் சக்திகளாக மாறும்.***

***அதனால் ஏழை, செல்வனாவான்.***

ஏழை, தான் ஏழ்மையைவிட்டு வெளிவர முடியாதுஎன நம்புவதால் ஏழ்மை நீடிக்கிறது. வரமுடியும்என நம்புவதாலும், முயல்வதாலும், அதற்கு ஆத்மாவைத் துணைதேடுவதாலும், நடக்காதது நடக்கும்.

✡ கீழ்மட்டத்தினின்று மேல்மட்டம் வந்த உத்தமர்களை ஆயிரமாயிரமாகப் பத்திரிகைகள் பாராட்டி எழுதுகின்றன

❀ ❀ ❀



# பூரண யோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

## (16) சக்தியினின்று ஜீவியத்திற்கும், ஜீவனுக்கும் செல்லும் பாதை

இந்த தலைப்பில் 140க்கு மேற்பட்ட முறைகளை எழுதுகிறேன். இவை அனைத்தும் ஏற்கனவே எழுதப்பட்டவை என்பதால் இதில் என்ன விசேஷம்எனத் தோன்றும். தலைப்பு ஒன்றேயானாலும் கோணம் வேறு. பரம்பரையாக நாம் பயிரிட்ட நிலம் வழியாக இன்று ரோடு போடப்பட்டது. நிலத்தில் மாறுதலில்லை. பயிரிட்டால் அதே பலன்தான் தரும். ரோடு வந்தபின் நிலைமை மாறுகிறது. விளைநிலம் ரோட்டால், மனை நிலமாகிறதுஎன்பது புதிய விஷயம்.

**பார்வை மாறினால் பலன் பெருகும்.**

சக்தியினின்று ஜீவியத்திற்குப் போனால், கர்மம் அழிகிறது. நிலைமை மாறுகிறதுஎன அறிவோம். அது நமக்கு நடப்பது அரிது. அப்படி நடந்தால் அதன்வழி யோகம் பலிக்கும்என நாம் அறிவதில்லை. அப்படி அறிவது வெறும்மனிதன் M.P. ஆவது போன்றது. ஒரு கம்பனியின் கிளையில் குமாஸ்தாவாக வேலை செய்பவன் இட்ட வேலையைச் செய்யவேண்டும். அதற்கு மேல் நினைக்க முடியாது. அவரையே தலைமையாபீஸுக்கு குமாஸ்தாவாகவே மாற்றினால் அந்த இடத்திலிருந்து கம்பனி சட்டத்தையே மாற்றும் அதிகாரம் உள்ள இடத்தில் செயல்படுவதால், அந்த அதிகாரம் சற்று அவருக்கும் வரும். அது சக்தியினின்று ஜீவியத்திற்குப் போவதுபோல. ஏதோ காரணத்தால் அக்குமாஸ்தாவை டைரக்டராக்கினால், அவரே சட்டத்தை இயற்றலாம். அது ஜீவனுக்குப் போவதுபோன்றது. நாம் பிரார்த்திக்கும்பொழுது பலன் வருகிறது. சில சமயங்களில் நம் வேலையை அடுத்தவர் எடுத்து அபரிமிதமாகப் பூர்த்தி செய்வதை நாம் காண்கிறோம். இது தானே நடப்பதாக நாம் அறிகிறோம்.

**நம் மனம் சக்தியினின்று நம்மையறியாமல் ஜீவியத்திற்கும் போவதால் இந்த மாற்றம் நடக்கிறதுஎன நாம் அறிய வேண்டும்.**

தலைமையாபீஸ்க்கு மாற்றலானபின் அங்கும் நான் குமாஸ்தா தானேஎன நினைப்பது, இடத்தின் முக்கியத்துவத்தைப் புறக்கணிப்ப-தாகும். அன்னைக்குப் பிரார்த்தனைசெய்து பலிப்பது, கடையில் நாம் ஒரு பொருள் வாங்குவது போன்றது. 10 ஆண்டிற்கு முன்னால் கிடைக்காத பொருள் இன்று கிடைப்பது பெரிது. நம்மூரில் கிடைக்காத மருந்து சென்னையில் கிடைக்கிறது. அது வசதி. யோகம் செய்வது அப்பொருளை நாமே உற்பத்தி செய்வது போன்றது. மலைக்கும் மடுவுக்கும் உள்ள தூரம். அதனால் இக்கருத்தை ஆழ்ந்து கவனித்துப் பலன் பெறலாம்.

**ஆழ்ந்த ஆராய்ச்சி அதிகப் பலன்தரும்.**

நான் இளைஞன். வேலைக்கு இன்டர்வ்யூக்கு வந்து வரிசையில் காத்திருக்கிறேன். என்முறை 10ஆவது. எனக்குமுன் 9பேர் இருக்கிறார்கள். திடீரென என் பெயர் அழைக்கப்படுகிறது. என்னை விசாரிக்கிறார்கள். வேலை கிடைக்கிறது. இது பெருமாற்றம். காரணம் தெரியவில்லை. என் சர்ட்டிபிகேட்டுகளில் ஓட்டப் பந்தயத்தில் பரிசு பெற்றதை ஆபீசர் கவனித்து எனக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்-கிறார்என்று தெரிகிறது. அத்துடன் நான் ஓடிய நேரம் அகில இந்திய ரிகார்ட்என நான் அறியேன். நான் வேலைக்கு வந்தேன். கம்பனி என்னை athlete விளையாடுபவனாகக் கருதுகிறது. இந்த ரிகார்ட்டால் நான் கம்பனிச் சார்பாக அகில இந்தியப் பந்தயத்தில் சேர்ந்தால், வெற்றி பெற்றால் எனக்கு அக்காரணத்தால் கம்பனியில் பிரமோஷன் சீக்கிரம் வரும். விளையாட்டு உலகில் அகில இந்திய ரீதியில் பிரபலமடைவேன்.

- ✡ வேலைக்குச் சம்பளம் கிடைக்கும்.
- ✡ என் விளையாட்டுத் திறமைக்குக் கிடைப்பது பெரியது.
- ✡ அதனால் இந்த 140 முறைகளில் ஏதேனும் நம் வாழ்வில் எழுந்திருந்தால், அது நம்மை அடுத்த கட்டம், முடிவான கட்டமான யோகத்திற்கு அழைத்துப் போகும்.



**சக்தியிலிருந்து ஜீவியத்திற்குப் போவது பிரார்த்தனையிலிருந்து யோகத்திற்குப் போவதாகும்.**

## (17) அகம் புறத்தை ஆள்வது

பிரார்த்தனை பலித்தால் அல்லது தியானம் நிலைத்தால் அல்லது இந்த 140 முறைகளில் எது ஓரளவு பலித்தாலும், மற்ற அத்தனையும் ஓரளவு முன்னேறும். அத்தனையும் முன்னேறாமல், ஒன்று பலிக்காது.

- ✡ நமக்குத் தெரிவது ஒன்று.
- ✡ பலிப்பது அனைத்துமாகும்.
- ✡ நம் ஆராய்ச்சி, நமக்குத் தெரிந்த கோணத்திலிருந்து மட்டும் தொடரும்.

பிரார்த்தனை பலிப்பது என்பதே புறத்திற்குள்ள முறைகளைத் தவிர்த்து அகத்தில் முயல்வதாகும். நம் செயலைத் தவிர்த்து அன்னையை நம்புவது சமர்ப்பணம். எனவே சமர்ப்பணம் அகத்திற்குரியது. மௌனம், புறமான பேச்சிலிருந்து அகமான பேச்சற்ற நிலைக்குப் போவது. நமது ஜீவியம் உலகம்என்ற புறத்தினுடையது. பிரபஞ்சஜீவியம் புறத்திலில்லை, அகத்திற்கே சொந்தமானது. பக்கம் 1039 - *The Life Divine* இல் பகவான் பிரம்மாண்ட ஞானோதயத்தைப் பற்றிப் பேசுகிறார். அது ஆன்மா ஜடத்தை ஆள்வதாகும். அதுவும் அகத்திற்குரிய சித்தியே.

- ✡ நமக்கு தியானம் பலிக்கிறது, பிரார்த்தனை பலிக்கிறதுஎன்ற பார்வை அதைக் கடந்து யோகம் பலிக்கிறதுஎன உணரும் கட்டத்தில் நம் பார்வையில் எந்த வாயில் மூலம் ஞானம் உதயமாகிறது, யோக வாயில் திறக்கிறதுஎனக் காண்பது அப்பாதையைப் பின்பற்ற உதவும்.
- ✡ இதை எப்படிப் பின்பற்றுவது?

வழிகளை இரண்டாகப் பிரிக்கலாம்.

1. திறந்த வாயிலை அடுத்தஅடுத்த கட்டங்களுக்கு எடுத்துப் போகலாம். எந்த சித்திக்கும் பல நூறு கட்டங்களிருப்பதால் அதை அறிவது எளிது. செய்வது அவ்வளவு எளிதன்று.

அகம்என்பதில் முதல்நிலை மனம். மனத்தில் அடுத்த நிலைகள் சூட்சுமம், காரணம்.

இரண்டாம் மூன்றாம் நிலைகள் உணர்வு, உடல்.

அவற்றுள்ளும் அடுத்த கட்டங்கள் மனத்தைப் போலவேயுண்டு.

2. இரண்டாம் முறை:

புறம் நகர்ந்து அகத்தை அடைந்தால், இப்பட்டியலில் உள்ள 140 முறைகளில் அடுத்த சிலவற்றைப் பின்பற்றலாம்.

உதாரணமாக மௌனத்தையும், பிரபஞ்சஜீவியத்தையும், அடிமனம் திறப்பதையும் முயலலாம்.

முதன் முறை தொடர்ந்து உயருவது. இரண்டாம் முறை horizontal பக்கவாட்டில் எல்லாத் திசைகளிலும் உள்ள வாயில்களைத் திறப்பது. உயரே போகும்பொழுது பக்கவாட்டில் உள்ள முன்னேற்றம் வரைக்குமே உயர முடியும். அஸ்திவாரம் அகலாமல், உச்சி நகராது. எனவே ஒன்று மற்றதைப் பொருத்தது. நாம் எதையும் பின்பற்றலாம்.

✡ யோகத்தை நாடுபவர்க்கே உரிய முறைகள் இவைஎன்பதால், இது தீவிரமான அன்பர்கள் முழுமுயற்சியை மேற்கொள்ளும்பொழுது மட்டும் இவை பலிக்கும்.

✡ **யோகம் பலித்தால் இலட்சியம் பூர்த்தியாகும். யோகம் பலிக்காவிட்டால் வாழ்வு அபரிமிதமாகப் பரிமளிக்கும். (140 முறைகளாக இக்கருத்து விளக்கப்படுகிறது).**

*தொடரும்.....*

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

உடலுக்கு இறைவன் பணிவாக வெளிப்படுகிறான்.



# அன்பர் கடிதம்

*அன்னை துணை.*
*ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய!*

ஸ்ரீ அன்னை மற்றும் ஸ்ரீ பகவான் பொற்பாதங்களுக்கு எங்கள் சாஷ்டாங்க நமஸ்காரங்கள்.

நாங்கள் அன்னையிடம் முழுமையாக வந்து மூன்று வருடங்கள் ஆகின்றன. நாங்கள் எங்களுக்குச் சொந்தமான வீட்டில் ஒருவரைக் குடி வைத்து இருந்தோம் (சுமார் 6 வருடங்களாக). அந்த வீடு townல் இருந்து சற்று outerல் இருப்பதால் ரூ.1500/- மட்டும் வாடகை வந்து கொண்டு இருந்தது. எங்கள் பெண் B.Tech. III year படிக்கிறாள். பையனை +1ல் நல்ல பள்ளியில் சேர்க்க வேண்டும். அவனை எந்தப் பள்ளியில் சேர்க்க வேண்டும்என்ற பொறுப்பை அன்னையிடம் விட்டுவிட்டோம். பள்ளி மற்றும் கல்லூரி fees கட்டுவதற்கு எங்களுடைய வீட்டை விற்றுவிடலாம்என்று எண்ணிக் கொண்டிருந்தோம். அன்னையை அழைத்துக்கொண்டு எங்கள் வீட்டில் குடியிருந்தவரிடம் சென்று நாங்கள் வீட்டை விற்க முடிவு செய்துள்ளோம். எனவே 2 அல்லது 3 மாதத்திற்குள் வீட்டைக் காலி செய்து கொடுங்கள் என்று சொன்னோம். அவரும் அதற்கு ஒப்புக் கொண்டார். அதன்பின் வீட்டிற்கு அருகில் இருந்த நண்பர் ஒருவரிடமும் சொல்லி வைப்போம்என்று அவரிடம் போய் தற்சமயம் அங்கு அந்த இடத்தில் ground என்ன விலை போகிறதுஎன்றும் விசாரித்தோம். அவரும் தற்போதைய விலையைச் சொன்னார். நாங்களும் வீட்டின் மதிப்பு + ground விலை இரண்டையும் சேர்த்து 7.5 லட்சம் ஆகிறதுஎன்று தொலைபேசியில் தெரியப்படுத்தினோம். அது சமயம் பார்த்து அவர்கள் எங்கோ நிலம் வாங்க முன்பணம் கொடுப்பதற்காக கிளம்பிக் கொண்டு இருந்ததாகவும், நாங்கள் விலையைத் தொலைபேசியில் சொன்னதை சுபசகுனமாகவும் எடுத்துக் கொண்டு, எங்கள் வீட்டைத் தாங்களே வாங்கிக் கொள்வதாகவும் (7.25 லட்சத்திற்கு) பேசி முடித்து ரூ.5000/- முன்பணத்தையும்

கொடுத்துவிட்டு அடுத்த நாளே ரூ.1 லட்சம் இன்னும் முன் பணமாக வைத்துக் கொள்ளுமாறும் கூறி ஓர் ஒப்பந்தம் எழுதி முடித்தோம். அவர்கள் கொடுத்த முன் பணத்தை வைத்து பெண்ணிற்கு கல்லூரி feesஉம், பையனை, திருச்செங்கோட்டில் உள்ள ஒரு நல்ல பள்ளியிலும் சேர்த்துவிட்டோம். எங்கள் பையன் ஏப்ரல் மாதம் result வருவதற்கு முன்பே அந்தப் பள்ளியில் சேர entrance பரீட்சையும் எழுதியிருந்தான். 2 அல்லது 3 நாட்கள் கழித்து அந்தப் பள்ளியில் இருந்து எங்கள் பையனை April 24ஆம் நாள் (Darshan day) கொண்டு வந்து சேர்க்குமாறு தொலைபேசியில் தெரியப்படுத்தினார்கள். (இது அன்னையின் முடிவு). X CBSE தேர்வில் 412/500 வாங்கி இருந்தான். தான் மதிப்பெண் குறைத்து வாங்கிவிட்டோம்என்ற வருத்தம் அவனுக்கு இருந்தது. பிறகு மறு மதிப்பீட்டிற்கு விண்ணப்பம் செய்ததில் அவனுக்கு Scienceல் 10 மதிப்பெண் அதிகம் வந்தது. அதனால் மதிப்பெண் 422/500க்கு என்று ஆனதில் எல்லோருக்கும் மிக்க மகிழ்ச்சி. இதைத்தான் அன்னையின் தனிப்பட்ட முத்திரையாக எண்ணி அன்னைக்கு நன்றி தெரிவித்தோம்.

இது இப்படியிருக்க வீட்டில் குடியிருந்த நபர் 2 மாதம் ஆகியும் வீட்டைக் காலி செய்யாமல், வீடு பார்த்துக் கொண்டு இருக்கிறேன் என்று சொல்லியே காலதாமதம் செய்துவந்தார். பின்னர் ஒரு நாள் திடீரென்று வீட்டை நானே வாங்கிக் கொள்கிறேன் என்றும், நாங்கள் என்ன விலைக்குப் பேசியிருந்தோமோ, அதே விலைக்கே, ஒரு வாரத்திற்குள் பணம் கொடுத்து விடுவதாகவும், ஒரு பொது நண்பர் முன்னிலையில் பேசி, ஒரு வாரத்திற்குள் முழுப்பணத்தையும் கொடுத்துத் தம் பெயரில் பவர் ஆப் அட்டார்னி மூலம் செட்டில் செய்து விட்டார்.

இவை அனைத்தும் நடந்தது, எங்களிடம் வீட்டிற்கு advance செய்து, agreement போட்டு, பிறகு எங்களுக்கு எந்தவிதமான கஷ்டமும் வரக்கூடாதுஎன்று அந்த நண்பர் தம்முடைய பிடியையும் உரிமையையும் விட்டுக் கொடுத்ததால் தான். இதை நாங்கள் மதர்தான் இத்தனையும் நடத்தி எங்களுடைய வீட்டை விற்க (at a strokeல்



பணம் ஏற்பாடு பண்ணி) உதவியுள்ளார்என்பதை நினைத்து, நினைத்து அன்னைக்கு நன்றி தெரிவித்த வண்ணம் உள்ளோம்.

நாங்கள் நினைத்தது ஒன்று. பஞ்சாயத்தில் வீட்டில் குடியிருப்பவர் நல்ல முறையில் காலி செய்து கொடுப்பார். நாங்கள் advance போட்ட பார்ட்டியிடம் விற்றுவிடலாம்என நினைத்தோம். ஆனால் அன்னையின் முடிவோ வேறுவிதமாக அமைந்தது. Agreement போட்டவர் விலகச் சம்மதித்து வீட்டில் குடியிருந்தவரே ஒரே வாரத்தில் தொகையைக் கொடுத்து வீட்டை முடித்துக் கொள்கிறார்.

*- ஜெயராம், திண்டுக்கல்*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அறிவுடை விளக்கத்தை வகுக்க, பகுத்தறிவு பயன்படும். அறிவு ஒரு பிரகாசம். அதன் ஒளி தெளிவைக் கொடுக்கக் கூடியது. தெளிவைமட்டுமே கொடுக்கக் கூடியது. அடுத்தவரை ஏற்றுக்கொள்ளவைக்கும் சக்தி அதற்கில்லை. அதிகபட்சம் அதன் உண்மையை மற்றவர்க்குத் தெளிவுபடுத்த முடியும். அடுத்தவர் மனம் ஏற்றுக்கொள்ளா விட்டால், அவர் தமக்குப் புரியவில்லை என்பார்.

***அறிவு தெளிவு தரும்.***

***உணர்வு ஏற்காததை மனம் புரியவில்லைஎன்று கூறும்.***

# மனிதனும் மிருகமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

சியாமளா ராவ்

“ஐயோ... என் குழந்தையை வித்துடப் போறார் போலிருக்கே...” அம்மா... அம்மா... காப்பாத்துங்கோ. எனக்கு இப்ப உன்னைத் தவிர யாருமேயில்லே. நான் என்ன பண்றதுன்னும் புரியலே. பச்சிளம் சிசு, இதைப் போய் விலை பேசியிருக்காரே... அம்மா... வாங்கோ... எனக்குத் துணையாயிருங்கோ... இந்தக் குழந்தையைக் காப்பாத்துங்கோ. என் மனசார உங்க காலடியிலேயே இந்தக் குழந்தையை விட்டுருக்கேன். காப்பாத்துங்கோ... காப்பாத்துங்கோ... அம்மா... அம்மா... அம்மா...”

கண்களிலிருந்து நீர் மணிகள் உருள, ஆடாமல், அசையாமல் அன்னையின் சரணத்தை விடாமல் கூறிக்கொண்டேயிருந்தவளின் கண்களை இமைகள் மூடின. உடல் மட்டும் அங்கிருக்க, அவளின் இதயம், அன்னையைச் சரணடைந்ததில், வேறு எந்தவிதமான எண்ணங்களும், கண்ணீரும், உணர்வுகளும் அற்றுப்போக, அப்படியே தியானித்தபடி, இருந்த நிலையிலேயேயிருந்தாள். எத்தனை நேரமோ அவளுக்கே தெரியாது. பரிபூர்ணமாக அன்னையின் பாதங்களைப் பற்றிச் சரணாகதியடைந்திருந்தாள். அவளைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதே அவளுக்குத் தெரியாத அளவிற்கு, அன்னையின் பாதங்களில் அவளின் அத்தனை உணர்வுகளும் சரணடைந்திருந்தன. ஆனாலும் உடல் அசையாமல், படுத்த நிலையிலேயேயிருந்தாள்.

இவ்வாறு சரணடைவதுஎன்பது எல்லோருக்கும் சாத்தியமே-யில்லை. நிச்சயமாய் அலைபாயும் நம் மனம், பல கிளைகளை ஏற்படுத்திக் கொண்டு, ஒவ்வொன்றிலும், ஒவ்வொரு நினைவலையை உற்பத்தி செய்து அலைகழிக்கும். இதைத் தவிர்க்க, நம் மனம் முழுவதும் ‘அன்னையே’ சுழன்று கொண்டிருக்க வேண்டும். ஆமாம்... நிச்சயமாய், ‘அன்னை’ என்கிற அந்த மூன்றெழுத்துகளை



மனமுழுவதும் உலவ விடவேண்டும். அதுவும் அந்த உலாவுதல், அன்னையின் இச்சைப்படித்தானிருக்க வேண்டுமேதவிர, நம் இச்சைக்கு உகந்தபடி இருக்கவே கூடாது. அடுத்து நமக்கு நடக்கப் போவது என்ன? இந்த கேள்விக் குறிகளோ, அதற்குண்டான மனதின் சுழற்சிகளோ, அறவே நம்மை விட்டு விலகவேண்டும். ஆமாம்...

ஒரு தாயின் வயிற்றில், குழந்தை ஜனிப்பதிலிருந்து, ஒன்பது மாதங்கள் வரை, தன்னுடைய உடலை, அவயவங்களைக் குறுக்கிக் கொண்டு, அதுவும், ஒவ்வோர் அவயவமாக உற்பத்தியாகும் போது, அதன் வளர்ச்சி, அந்த சிசுவே உணரமுடியாமல், அந்த கர்ப்பக்கிரஹத்தில், எந்தவிதமான சஞ்சலமோ, பயமோயின்றி, அந்த இருட்டறையில் மிதந்து, சுழன்று கொண்டிருக்கிறதே... அந்த ‘அஞ்ஞானி’ குழந்தை, அந்த இருட்டறையிலிருந்து வெளியே வந்தவுடன், கை கால்களை அசைக்கத் தெரிந்த அந்த சிசு, வளர, வளர, அந்த சரீரத்தில் மாற்றங்கள் இயற்கையாக அமைய, அந்த ‘மனம்’ என்னும் உணர்வில் மட்டும், ஏன் ஒவ்வொருவருக்கும், ஒவ்வொருவிதமான எண்ணங்கள், நல்லதும், அல்லாததுமானதாக வெவ்வேறு விகிதத்தில் ஏற்படுவது எதனால்?

‘சூழ்நிலை’. ஆமாம், நம்மைச் சுற்றியிருக்கும் சூழ்நிலையேயன்றி, வேறெதுவுமில்லை.

மாசற்ற சூழ்நிலையில் வாழ்ந்து வந்தவர்கள் நம் முன்னோர்கள். அதனால் அந்தக் காலத்தில் இருந்தவர்களிடையேயிருந்தது, சத்தியமும், நேர்மையும், உண்மையும் ததும்பியிருந்தன. அதனால் நீரும், காற்றும், ஏன் ‘பஞ்ச பூதங்களும்’ அவரவரின் வேலையை, அந்தந்த நேரத்திற்குத் தகுந்தபடி தங்கள் வேலையைச் செய்தனஎனக் கூறினால் மிகையாகாது.

மிருகங்களும், தங்களுக்கான தேவையைத் தவிர, மற்றபடி எந்த தொந்திரவுமின்றி, சுதந்திரமாய் காட்டில் உலாவின.

விட்டோமா நாம். காடுகளையும் அழிக்கத் தொடங்கிவிட்டோம். மிருகங்களின் வாழும் இடத்தையும், ஆகாரத்திற்காக, அவைகளின் வேட்டைக்கான சுற்றுப்புறங்களையும் தகர்த்து, அழித்தே விட்டோம்.

அப்போது அந்த மிருகங்கள் வேறு வழியின்றி, ஆகாரத்தின் பொருட்டு, தங்கள் இடத்தைவிட்டு, வெளியே வரவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது மனிதர்களாகிய நாம்தான். மிருகங்கள், தத்தமது இயல்புடனேயேதான் இருக்கின்றன இப்போதும். ஆனால், அவைகளையும் தூண்டிவிடுவதுபோல், அவைகளின் சூழ்நிலைகளை அழித்து, நம் இச்சைக்கேற்ப நடந்துகொள்வது, மனிதர்களாகிய நாம்தான். இப்போது புரிகிறதா... மாறியது மனிதர்களா? இல்லை மிருகங்களா?

நம்முள்ளேயே இந்தக் கேள்வியைக் கேட்டால் நாமே தலைகுனிய வேண்டிய நிலைதான்.

ஆம், மனிதர்கள்தாம் மாறி, சந்தர்ப்பத்திற்கேற்றவாறு, மிருக குணங்களைத் தங்களுக்குள் அனுமதித்துக் காரியத்தைச் சாதித்துக் கொள்கின்றனர் என்பது உண்மைதானே. இதில் மனிதனை உயர்த்தியும், மிருகங்களைத் தாழ்த்தியும் நாம் பேசுவது சரியா? தவறா?

இதை அவரவர்களே, தங்களுக்குள் 'பட்டிமன்றம்' நடத்திப் பார்த்து, தீர்மானிக்க முடியுமாஎன்று பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்.

❀❀❀

ராமனாதன், வந்தவருடன் வெளியே போனது புரிந்தது. பார்வதியின் மனம் இப்போது, தைர்யமாக யோசிப்பதில் ஈடுபட்டது. சட்டென மாமியின் வீட்டிற்கு, குழந்தையை எடுத்துக்கொண்டு சென்றாள்.

''என்னடி பார்வதி... என்ன விஷயம்? சொல்லு...''

நடந்ததைக் கூறினாள் கண்கள் கலங்க. ஆனால் உடனே சுதாரித்து தைர்யமாய் பேசவும் செய்தாள்.

''மாமி... நான் அன்னைகிட்ட சொல்லிட்டேன். கண்டிப்பா இந்த விஷயம் நடக்காது. அன்னை விடமாட்டார். எனக்கு தைர்யம் வந்துடுத்து. நடக்கவே நடக்காது. ஆமா மாமி. என்னோட நியாயமான கோரிக்கைக்கு அன்னை கைவிடமாட்டார். அந்தத் தைர்யம் எனக்கு மனசு ரொம்பயிருக்கு மாமி. பயமேயில்லே. நடக்காது மாமி... நடக்காது...



ம்... ஆமாம்...'' உறுதியுடன் சொல்லும் பார்வதியையே ஆச்சர்யத்துடன் பார்த்தாள் மாமி.

புரிந்துபோனது மாமிக்கு. அன்னையை அவள் தன் மனமார ஏற்றுக்கொண்டுவிட்டாள்என்பது அறிந்ததில், மனம் கொஞ்சம் சமாதானமாகியது. ''ம். இனிமேல் பார்வதி, எந்தவிதமான இக்கட்டுகளையும், கஷ்டங்களையும், அன்னையின் துணையோடு, விலக்கிவிடுவாள்என்கிற நம்பிக்கை அவளுள் ஆணித்தரமாக உட்கார்ந்தே விட்டது. அன்னையின் சரணத்தைக் கூறியபடி கண்கள் தளும்ப, மெய்சோர நின்றவளின் தோளில் ஒரு கரம்பட, நினைவிற்குள் வந்தாள்.

''மாமி... இந்த வீடு வாடகை வீடு. அதனால, இதைக் காலி பண்ணிடலாம்னு இருக்கேன் மாமி...''

''என்னடீ சொல்றே...' இதை விட்டா, இதே வாடகைக்கு வேறு வீடு கிடைக்குமா... வீடு சிறுசாயிருந்தாலும், பின்னாடி கொல்லைப்புறமும், செடிகளுமா காத்தோட்டமா தனி வீடு போலவிருக்கு. இப்டி வேறெங்காவது கிடைக்குமாடி பார்வதி. எல்லாத்தையும் விடு. நான் ரொம்ப உன்னைத் தொந்திரவு பண்றேனோ... அதனால என்னைவிட்டு விலகலாம்னு நினைக்கிறாயாடி... சொல்லு...''

கேட்டபடி மாமி, கண்கள் வழிய, உதடு பிதுங்க, துடித்தபடி கேட்டவளை, அப்படியே குழந்தையைக் கீழே படுக்கவிட்டு, ஓடி வந்து மாமியை கட்டிப்பிடித்துக் கொண்டவள், கண்ணீரைத் துடைத்தபடி கூறினாள்.

''மாமி வீட்டைத்தான் காலி பண்ணணும்னு சொன்னேனே ஒழிய, உங்களை விட்டுப் போறேன்னு சொல்லவேயில்லையே மாமி...''

''அப்போ... என்ன சொல்லவரே...'' இடைமறித்துக் கேட்டாள் மாமி.

''உங்காத்துலேயே குடி வந்துடப் போறேன்னுதான் சொல்ல வந்தேன். ஆமாம் மாமி. நீங்களும் உங்க வீட்டுக்கும், எங்க வீட்டுக்குமா அலைய வேண்டியிருக்கு. பெரியவனோ... உங்காத்துலேயே

தான் இருக்கான். எல்லாத்தையும்விட எங்காத்துக்காரரோட, எண்ணங்களிலிருந்து தப்பிக்கணும்னா... உங்க வீட்டோட-யிருக்கணும்னு தீர்மானம் பண்ணிட்டேன். அதுவும், இந்த எண்ணத்தை உண்டு பண்ணினதே 'அன்னை'தான். ஆமாம் மாமி. எனக்கு அன்னையைக் காட்டிக்கொடுத்தது நீங்கதான். அந்த அன்னையை இந்த வீட்டுல கொண்டு வந்ததும் நீங்கதான். இப்போ, நான் சொன்ன, இந்த யோசனையையும் தந்தது அன்னைதான். எனக்குத் துணையாயிருக்க வேண்டியவரோட துணையே... பிரயோஜனமில்லாதது என 'அன்னை'க் காட்டிக் கொடுத்துட்டார். உங்களோடயிருந்தா... இந்த மாதிரியான எண்ணங்களை, ஆரம்பத்துலேயே துண்டிச்சு விட்டுடலாம். நிச்சயமா அவரால எதையும் செய்யவிடாம பண்ணிடலாம் மாமி. என்ன சொல்றேள்...''

''தனிக்கட்டையாயிருக்கிற எனக்கு, நீயும், குழந்தைகளுமா கலகலன்னு இருக்கப் போறதை நினைச்சாலே பொங்கறதுடி மனசு. வந்துடு. ஆனதைப் பார்க்கலாம். நல்லதனமாவே... உன்னோட ஆத்துக்காரரை வழிக்குக் கொண்டு வர, அன்னை உனக்கு இந்த யோசனையைத் தந்துருக்கார். நல்லதாச்சு. சரி... சாமானையெல்லாம் எடுத்து வைக்கட்டா...''

''ம்... ஹூம்... வேண்டாம் மாமி... அவர் வரட்டும். வந்த பிற்பாடு, அவரோட அனுமதியோடவே வரேன் மாமி. நாம எல்லாமே அவரோட விருப்பப்படி நடக்கறாப்பலயிருக்கணும். நாமா எல்லாத்தையும் ஏற்பாடு பண்ணினது போலவிருந்தா, அவரோட விருப்பத்தைக் கேக்காம, நம்ம இஷ்டப்படி நடக்கிறதுபோல தோணிடுத்துன்னா... அவ்வளவுதான். எல்லாமே வேறேவிதமா மாறிடும். அவர் வரட்டும். கேட்டுண்டே நடக்கலாம்னு இருக்கேன்... சரியா மாமி...''

வியந்தேதான் போனாள் மாமி. ஒண்ணுமே தெரியாதவளாக, எப்போதும் சோகத்தையே முகத்தில் தரித்துக்கொண்டு, பலகீனமானவளாக, கண்களில் ஒளியேயின்றி, சுறுசுறுப்பில்லாமல், 'என் தலைவிதியே இப்படித்தான்' என்பதுபோல் சுரத்தில்லாமல் அலைந்து கொண்டிருந்தவளின் முகம் இப்போது... ம்... இப்போது எப்படி ஒரு தெளிவோடு, தெம்போடு இருக்கிறது. கட்டியவனின்



அலைக்கழிப்பில் மனம் நொந்து போனவளின் மனதில், எப்படி இத்தனை யோசனைகள்? அதுவும், அந்தக் கணவனின் அனுமதியோடு, அவனைக் கலந்தாலோசித்தே செய்ய வேண்டுமென்ற எண்ணம் வந்ததெப்படி?

அன்னையின் பாதங்களையே, 'சரணாகதி' எனப் பற்றிக்கொண்டவளுக்கு, அவளுள்ளேயே புகுந்து, நல்ல தெளிவையும், யோசனைகளையும் அள்ளி, அள்ளித் தருகிறாரென்றால்... காரணம் பார்வதியேதான். ஆமாம், அவளின் சரணாகதியும், 'அன்னை' என்றாலே பரவசப்படும் உணர்வுகளும், பிரார்த்தனை என்றாலே, மெய்மறந்துபோகும் நிலையும், அந்தக் கணத்தில் அவளுள் 'அன்னை'யைத் தவிற வேறெந்த எண்ணங்களோ, நினைவுகளோ, ஊசி முனையளவுகூட புகுந்துவிடாமல், 'அன்னை' என்கிற அந்த சுழற்சியை மட்டுமே, உச்சி முதல் பாதம் வரை பரவச் செய்து, அந்த மூன்றெழுத்திலேயே அவளுடைய மூச்சுக் காற்றும் உலாவுவதால், உலவச் செய்வதால், 'அன்னை' நிச்சயம் அவளுக்குத் தன் கடைக்கண் பார்வையை, மகிழ்ச்சியோடு வீசமாட்டாரா என்ன?

**"சிறப்பான வாழ்க்கை - அன்னைக்குப் பிடித்த மனநிலைக்கு அடையாளம்"**

**"சிரமமான வாழ்க்கை - அன்னைக்குப் பிடிக்காத மனநிலைக்கு அடையாளம்"**

''அன்னை'' என்னும் மகாசக்தியை ஏற்றுக்கொண்ட நம் மனம், ஆரம்பத்தில் எத்தகைய உணர்ச்சிபூர்வமாக, முழுஉணர்வுமாக, உண்மையாக, மனம்பூராவும் மட்டுமின்றி, நம் சரீரம் பூராவும் புளகித்து, மயிர்க்கூச்சம் ஏற்படும் அளவிற்கு, சரீரமே சிலிர்த்துப்போகும் அளவிற்கு, நம் பிரார்த்தனையின் தீவிரம் இருக்கிறது. அந்த, அதே உணர்வுகள் நம்மிடம் எப்போதும் இருக்கிறதா என, நாமே, நம்மை உணர்ந்து அறிந்தோமானால், நாட்பட, நாட்பட, அந்த உணர்வின் தீவிரம், பிரார்த்தனையின் உணர்வுகள், எல்லாமே... எல்லாமே மிகச் சாதாரண நிலைக்கு, முதலிலிருந்த அசாதாரணத்தைவிட்டு

வந்துவிடுகிறது. இதயத்திலிருந்து வரும் பரிபூர்ணமான பிரார்த்தனை நம்மிடம் முழுமையாக இருப்பதில்லை.

தினந்தோறும் ஓர் ஊதுபத்தி ஏற்றி, கண்கள் மூடி, தியானிக்கிறோம். அந்த தியானத்தின் முழுமை? ஆம், கேள்விக்குறிதான். தியானம்என்பது நீண்ட நேரம் செய்ய வேண்டுமென்பதேயில்லை. நம் மனதை ஒருங்கிணைத்து சில நிமிடங்கள், ஆமாம்... சில நிமிடங்களே செய்தால் போதுமானது. ‘அன்னை’ நம் மனதை எத்தனை ஆக்ரமிக்கிறாரோ, அத்தனை நமக்குத் தான் நன்மை. அந்த நன்மையை, நம்மை விட்டு அகலாதபடி, ஒரு பிடிப்போடு இருத்திக்கொள்ள வேண்டுமென்றால், நம் மனதுள், இதயத்தினுள் அன்னையின் ‘ஆவாஹனம்’ மிகமிக அவசியம்.

நம் விலையுயர்ந்த நகைகளை, லாக்கரில் வைத்தோ, இல்லை புதுமையான பூட்டுக்கள் கொண்ட மரப்பெட்டியிலோ, இன்னும் வேறு ஏதாவது பாதுகாப்பான இடத்தில் வைத்துப் பத்திரப்படுத்துகிறோம்.

நம் உடைகளை, பட்டுப் புடவைகளை, அழகாக மடித்து, ஒரு நல்ல வெள்ளைத் துணியிலோ, அல்லது டவலில் சுற்றியோ, பூச்சி உருண்டைகளைப் போட்டு, உலர்ந்த வெட்டிவேரைப் போட்டோ, அத்தனை முக்கியத்துவத்துடன் பராமரிக்கிறோம்.

இத்தனையும் செய்யும் நாம், நம் இதயத்தை மட்டும் எந்த விதமான யோசனையுமின்றி, கருத்துமின்றி, அதனிஷ்டப்படி அலைய விட்டுவிடுகிறோமே... இது முறையாகுமா?

இல்லையென்று நன்றாகவே புரியவும்புரிகிறது. ஆனாலும் மாற்றம் என்பதை உணர, கொஞ்சம் சங்கடமாகவேயிருக்கிறதுதானே?

நம் மனச் சங்கடங்களை, நம் நெருங்கிய சிநேகிதியிடமோ, இல்லை உற்றாரிடமோ, பெற்றவரிடமோ சொல்கிறோமேதவிர, முதலில் ‘அன்னையிடம்’ கூறி, ‘சரணாகதி’ அடைவதைக் கடைசியில்தானே செய்கிறோம். இது சரியா? அதைப் பற்றிய யோசனையே... மிக நேரம் கழித்து நம்முள் வருகிறது. இதை நிச்சயம் நம்மால் தவிர்க்கப்பட வேண்டும்என்பதே நம்முள் முதலில் ஏற்படவேண்டிய தீர்மானம். இதை உணர்ந்தால், நம் வாழ்வை அன்னையின் கரத்தில் ஒப்படைத்து



விட்டோமானால், நம் வாழ்க்கையின் தரம் உயர்வது நிச்சயம் நமக்குப் புரியும். ஒவ்வொரு படியையும் சுலபமாகக் கடந்துபோக, அன்னையின் கரம் நம்மை ஆட்கொள்ளும். இது சத்தியமான நிஜம்.

பார்வதி, தன் முழுமனதுடன் அன்னையை ஏற்றுக்கொண்டு விட்டாள். கணவனின், வேண்டாத சேர்க்கைகள், அதனால் எந்த கீழ்த்தரத்துக்கும், தன் குழந்தையை விற்கும் அளவிற்குப் போனாலும், அன்னையின்முன் நின்று, தன் சங்கடத்திற்காகப் பரிகாரம் வேண்டினாலும், அதே சமயம் கணவனையும் நல்வழிப்படுத்த வேண்டுமென்ற உறுதி அவளிடம் இருந்ததால், பெற்ற குழந்தையை விற்கத் துணிந்த கணவனின் எண்ணம் நடவாமலிருக்க, கூடவே ஒரு ‘கரம்’ வேண்டி, மாமியின் வீட்டிற்கே குடிபோகும் யோசனையை, தன் கணவனின் அனுமதியோடுதான் போகவேண்டும்என்கிற தீர்மானம் அவளுள் எழுந்தது எதனால்?

எக்காரணம் கொண்டும் கணவரை இழிவுபடுத்தாமல், அதே சமயம் அவனின் எண்ணம் நடக்கவிடாமல், அன்னையின் துணையோடு, தைர்யமாக, சாதுர்யமாக, அன்பாக, பாசமாக நடந்து வெற்றியடைய வேண்டுமென்பதே அவளின் ஆழ்மன விருப்பம். நிச்சயம் இது நடந்தே தீரும்.

கெட்டுப் போன பதார்த்தங்களைத் தூக்கி எறியலாம். உடைந்து போனவைகளைக் குப்பைத் தொட்டியில் போடலாம். கிழிந்து போனவைகளை அழுக்குத் துடைக்க உபயோகிக்கலாம். கீழே கொட்டிப் போன, திரவ பதார்த்தங்களை அள்ள முடியாமல் கழுவிவிடலாம்.

ஆனால், ‘கணவன்’ என்னும் ஒரு மனிதன், மனதாலும், உடலாலும் கெட்டுப்போனாலும், ‘கண்-அவன்’ என்றே எண்ணிக் கொண்டிருக்கும் நாம், அவரைவிட்டு விலக முடியுமா? இல்லை விலகக்கூடுமா? எதற்கும் ஓர் எல்லை உண்டல்லவா?

மைசூர்பாகு கிளறி, வில்லையாக வரவில்லையென்றால், அதை உருண்டையாக ‘லட்டு’ போல் பிடித்து ஓர் உருவகப்படுத்துகிறோம் அல்லவா? அப்படியிருக்கக் கட்டிய கணவனை, நம்மால் முடிந்தவரை திருத்தப் பார்க்க வேண்டும். ‘அன்னை’ என்றும் ‘அற்புதம்’, எப்போதுமே

நம்மைக் கைக் கொடுத்து உயரத்துக்கு ஏற்றிவிடத் தயாராகயிருக்கும் போது, நாம் ஏன் தயங்க வேண்டும்? கூடாது.

“சிறப்பான வாழ்க்கை - அன்னைக்குப் பிடித்த மனநிலைக்கு அடையாளம்...”

அந்த சிறப்பான வாழ்க்கை அமைய வேண்டுமெனில் நம்மால் முடிந்தஅளவு, அதற்கான எல்லா நல்ல வழிகளையும், அன்னையின் உதவியோடு, அன்னையின் ஆசியோடு, அன்னையின் அருளோடு நம்மால் நிச்சயம் அடைய முடியும்என்பது உறுதியான ஒன்று.

“அருளோவியம்” பெயரே நம்மை ஈர்க்கிறதல்லவா! இன்றும் அதிலுள்ள இருபத்தெட்டு அத்தியாயங்களையும் படித்து, தெளிவடைதல் நமக்கு மிக அவசியம்.

அன்னையை நேரில் பார்த்திராத எத்தனை பேராகிய நாம், அவரைப்பற்றிய புத்தகங்கள், நம் வாழ்விற்குத் தேவையான அடிப்படைத் தத்துவங்கள், சமயத்திற்குத் தகுந்த பிரார்த்தனைகள், நம் மனதை மட்டுமன்று, உடல் நலத்தையும் சீராக்கும் பல விஷயங்கள் ததும்பும், இந்தப் புத்தகங்கள் நமக்கு அரிய, கிடைத்தற்கரிய பொக்கிஷங்கள். அந்தப் பொக்கிஷங்களை நாம் என்றென்றும் படித்து, நம் மனதில் ஈர்த்து, அதை அவ்வப்போது நம் வாழ்வில் செயல்பட்டு உணர்ந்து, நம் தவறுகளை, அறிந்தும், அறியாமலும் செய்த வேண்டாதவைகளுக்காக மனம் வருந்தி, அதை அறவே அகற்றி, செயல்படவேண்டுமென்பதே நம்முள் ஏற்படும் பெரிய மாற்றமாகவிருக்க வேண்டும். ஆமாம். இத்தகைய மாற்றங்கள் நம்மை, எப்படி, எந்தவிதத்தில் உயர்வாகவும், அன்னையின் அருள் கடாட்சத்துக்கு, அன்னையின் அருகிலேயே அழைத்துச் செல்லும்என்பது குறித்து, நம்மாலேயே நன்கு உணரக்கூடிய அளவிற்கு அன்னை செயல்படுவார் என்பது திண்ணம்.

அன்னையின் மேல் நாம் ‘நம்பிக்கை’ என்பதை பூரணமாக உணரவேண்டும். எந்த நிலையிலும், சந்தோஷமானதாகயிருந்தாலும் சரி, நம்மைக் கஷ்டப்படுத்தி, நம்மை பலவிதமாக ஆட்டிப் படைக்கும் நம் எண்ணங்களின் கூட்டங்களையும் சரி, ‘அன்னை’ என்னும்



மூன்றெழுத்து தாரக மந்திரத்தை, நம் மனதுள் பிரதிஷ்டை செய்து, நம்மை விட்டு அகலாமல், வெளியேறாமல் பார்த்துக் கொண்டோமானாலே போதுமே. நம் வினைகள், கஷ்டங்கள், வேண்டாதவைகள், நம் ‘பக்திக்கும்’, ‘சரணாகதி’க்கும் ஏற்றவாறு, நிச்சயமாக, சத்தியமாகப் ‘பலன்’ கிடைக்கும்என்பது திண்ணம்.

ஒரு சின்ன செடியையோ அல்லது விதைகளையோ, பூமியில் நட்டு, அதற்குத் தண்ணீர் ஊற்றி, உரமிட்டு, சின்ன வேலியைச் சுற்றிப் போட்டு, எந்தவிதத்திலும் அந்தச் சின்ன செடிக்கு, எந்தவிதமான தொந்திரவு வாராமல் பாதுகாக்கிறோமே! அது ஏன்?

“ம்... ஆமாம். நாளை அது வளர்ந்து, பூத்து, காய்த்து, கனிகளைத் தரும்என்கிற எதிர்பார்ப்பும், சந்தோஷமும், நம்முள் அந்தச் செடியோடு வளர்ந்து, அதன் வளர்ச்சியை ஈடுபாட்டோடு ரசித்து, ஒவ்வோர் இலையையும், மொட்டையும், பூவையும், காயையும், ஆவலோடு ரசிக்கிறோம், பிறகு ருசிக்கிறோம்.

நம் கண்கள் முன்னே பார்வையில் படும் அந்தச் சின்ன விதையின் வளர்ச்சியை நாம் அத்தனை உணர்வுபூர்வமாக உணர்ந்து மெய்சிலிர்க்கிறோம். ஒரு சின்ன பிஞ்சு அதில் விளைந்தால் கூட, மனசு புளகிக்கும் ஆரவாரத்துக்கு எல்லையுண்டா என்ன?

இத்தனை சந்தோஷங்களையும், வியப்பையும், நாம் நம் ‘அன்னை’யை மனதிலிறுத்தி, நம் மனதையே பூமியாக்கி, அதில் அன்னை என்னும் விதையை பக்தியோடு விதைத்து, நம் பக்தியின் உணர்வுகளையும், பரவசங்களையும், புளகித்தலையும், நீராக ஊற்றி, அந்தச் சின்ன விதை, நம் முன்னே செய்யும் அத்தனை விளைச்சல்களையும், ஒவ்வொரு வினாடியும் நம்மால் உணரமுடியுமே! அதுவும், நம்மிடம் உள்ள வேண்டாத எண்ணங்கள் என்னும் விதைகளை, நம் மனமாகிய பூமியிலிருந்து, நிச்சயமாகக் களைந்து எடுத்து விடுவதை, நம்மால் உணரமுடியும். நம்மால், நம்மிலிருந்து, களையவேண்டியதை உணர முடியாமல் போனாலும், அன்னையும், நாம் உணராமலேயே அதைக் களைந்துவிடுவார். (அந்த எண்ணம் நிறைவேறாமல் தவிர்த்து விடுவார்)

நாம் நினைத்த எண்ணம் ஒன்று, தடைப்பட்டு, நிறைவேறாமல் போனால், நம் மனம் படாதபாடு படுகிறது. ஆனால், அன்னையை தெய்வமாக வணங்கும், நம் எண்ணங்களில் தடைபட்டால், அந்தத் தடை 'அவசியம்' என்பதை நாம் உணர்ந்து, நல்ல விதத்தில் ஏற்றுக் கொள்ளக்கூடிய மனப்பக்குவம் நமக்கு வேண்டும். அந்த மனப் பக்குவத்தையும் நாம் 'அன்னை'யிடமே வேண்டிப் பெறலாம். எந்த ஒரு விஷயத்திற்கும், எண்ணங்களுக்கும், நம்மால் ஈடு கொடுக்க முடியாது போனாலோ, வழி தோன்றாமல் போனாலோ... நம்முள் ஏற்படும் சஞ்சலத்தையும், இயலாமையையும், ஏமாற்றங்களையும், நமக்குள்ளேயே வைத்துப் புழுங்குவது நமது இயல்பு. அந்த இயல்பை, நம்முள்ளிருந்து எடுத்து எறிந்துவிட்டால், அந்த அத்தனை தேவையற்றதும் நம்மிடமிருந்து விடுபட்டு ஓடியே போய்விடும். அது உறுதி.

உதாரணமாக, பிறப்பு என்றால் சந்தோஷிக்கும் நம் மனம், இறப்பு என்பதை, உடனடியாக வேண்டாம், கொஞ்ச நாட்களுக்காகவாவது மறக்க முயல்கிறோமா? ம்... ஹும்... அதுவும் தவறு. மறக்க வேண்டவே வேண்டாம். பிறப்பு... என்பது எப்படி இயற்கையும், இயல்புமானதோ, அதேபோல்தான் இறப்பும் இயற்கையானது என்பதை நம்மால் சுலபமாக ஏற்றுக்கொள்ள முடிகிறதில்லையே. அந்தப் பக்குவம் நமக்கு வரவேண்டுமெனில், எத்தனையோ நிலைகளைக் கடக்கவேண்டிய அளவில்தான் உள்ளோம். நாட்பட, நாட்பட, நம்முள்ளிருக்கும் அந்த எண்ணங்களின் வேகம் குறைந்து, அழுகை அடங்குகிறதே தவிர, அந்தத் துக்கம் 'ஒரு கறுப்புப் பொட்டாக' நம்முள் உறைந்து போய்விடுகிறது. இதுதானே நடக்கும் உண்மை.

''ஜனனம், மரணம்'' இந்த இரண்டையுமே ஒன்று போல் ஏற்றுக் கொள்ள, நம் மனத்தின் பக்குவத்தை அடைய, அன்னையின் கோட்பாடுகளில் சில... ஆமாம் சிலவற்றைக் கடைப்பிடித்தாலே போதும், நம்மால் முடியும். நிச்சயம் முடியும்.

''ம்... எவ்வளவு சுலபமாக எழுதிவிட்டீர்கள். இதெல்லாம் நடைமுறைக்கு ஒவ்வாதது. எழுத்தில் எதைவேண்டுமானாலும் எழுதி



விடலாம். அது மிகமிக சுலபம். அனுபவிப்பவர்களுக்கல்லவா அந்த துக்கமும், கஷ்டமும்என்று நீங்கள் கூறுவது என் காதில் நன்றாகவே விழுகிறது. தவறே அன்று. நீங்கள் கூறுவதும், இப்படிக் கேட்பதும் தவறே அன்று. அதே போல், நான் அப்படிக் கூறுவதும் தவறே அன்று.

என்ன, என் இந்தப் பேச்சு முற்றிலும் முரணாகத் தோன்றுகிறதா? தோன்றட்டும். தவறில்லை. ஆனால், எந்த நிலையிலும் அன்னை, ஸ்ரீ அரவிந்தரின் பாதங்களை நாம் பற்றிச் சரணடைந்தால், நீயே சரணாகதிஎன்கிற முழு மனதுடன் சரணடைந்தால்,... ம்... என்ன... அதற்கு மேல் அவரவர் அனுபவிப்பு, அவரவர்களுக்கே தெரியும், புரியும்.

''இதைச் சொல்ல உனக்கு என்ன தகுதியிருக்கிறது?''

இந்தக் கேள்வியை நீங்கள் கேட்பது தவறேயல்ல. அது மனித மனதின் இயல்பு. பதில் கூற வேண்டியதும் என் கடமைதான்... இதோ...

அடுத்தடுத்து இழந்த மூன்று இழப்பிற்கும் என்னால் தாள முடியவில்லைதான். என் கணவர், ஒரு புத்தகத்தில் அன்னையைப் பற்றி சொசைட்டி வெளியிட்ட கட்டுரையைப் படித்துவிட்டு, முதலில் அவர் மட்டுமே பாண்டி சென்றார். பார்த்தார். வீட்டில் அன்னை, ஸ்ரீ அரவிந்தரின் படங்களைக் கொண்டுவந்து பூஜையறையில் வைத்தார். மற்ற அத்தனைப் படங்களையும் அகற்றி, பிறருக்குக் கொடுத்துவிட்டார். இது சத்தியம். ஆனால், எனக்கு ஒன்றுமே புரியவில்லை. எதுவும் கேட்கவுமில்லை. என்னையும், என் மகனையும் அழைத்து, அவருடன் உட்கார்ந்து தியானம் செய்யச் சொன்னார். அதற்குமுன் கொண்டு வந்த பூக்களைத் தட்டுக்களில் அடுக்கி, நீர் தெளித்து வைத்தார். ஊதுபத்தி ஏற்றினார்.

நானும், என் மகனும், அவருடன் சேர்ந்து, இதுவரை அறிந்திராத தியானத்தை செய்தோம். அவரவருக்கு எப்போது எழ வேண்டுமெனத் தோன்றியதோ, அப்போது எழுந்தோம். ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளவில்லை. பேசிக்கொள்ளவில்லை என்பதைவிட, பேசஇயலாமல், எங்கள் மூவரையும் ஓர் அமைதியும், என்னவென்று சொல்லத் தெரியாத ஒரு நல்ல உணர்வும் எங்களைப் பிணைத்திருந்ததே உண்மை. அதை அன்று எங்களுக்கு உணர்ந்து

கொள்ளத் தெரியாவிட்டாலும், படிப்படியாய் அன்னையைப் பற்றிய, எத்தனையோ அனுபவங்களை உணரத் தொடங்கினோம். இன்று வரை எங்களின் தெய்வங்கள் அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும்தான். எங்கள் **மனதிலிருந்து துக்கத்தை எடுத்து வெளியே வீசிய என் 'அன்னை'யை என்றும் மறக்க இயலாது, முடியாது, முடியவே முடியாதுஎன்பது சத்தியம்**.

இதனால் என்னை ஏசியவர்களும் உண்டு, பேசியவர்களும் உண்டு. என்னைப் பற்றிய அவர்களின் அபிப்ராயத்துக்கு, அன்றும், என்றும் நான் மறுத்துப் பேசியதில்லை. ஆனால் அன்னையைவிட்டு எங்கள் குடும்பத்தால் விலக இயலாதுஎன்பதைமட்டும், தெரிவிக்க வேண்டிய விதத்தில் தெரிவித்துவிட்டோம். இப்போது அனைவர் வீட்டிலும் அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் குடியேறியிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. 'அன்னையே சரணம்' என்பதுதான் சத்தியம் என்பது நிஜமாகியது.

❀❀❀

அதே போலத்தான் பார்வதியின் அதீதமான பக்தி உணர்வும், ஆழ்ந்த நம்பிக்கையும், அவள் வாழ்க்கையில் எத்தனை வித மாற்றங்களை, நல்லவைகளை உள்ளே புகுத்தியது என்பதைப் பார்ப்போமா... அதற்கு முன் இன்னொன்றைக் கூறியே ஆகவேண்டும்.

மனிதரின் மனமாகிய நம்முடைய இயல்பு என்ன தெரியுமா? ''கையில காசு, வாயிலே தோசை''. எதையுமே உடனுக்குடனேயே அடைய வேண்டும்என்கிற எண்ணம்தான் முன்னின்று செயல்படுகிறது. கையில காசு. ஆமாம். அந்தக் காசை சம்பாதித்துத்தானே ஆகவேண்டும். அந்த சம்பாதனைக்காக நாம் உழைத்துத்தானே ஆகவேண்டும். அதே போல் தோசை சாப்பிட வேண்டுமெனில் சம்பாதித்த காசை வைத்துக்கொண்டு ஹோட்டலில் ஒரு நாள் சாப்பிடலாம். எப்போதாவதுதான் சாப்பிட முடியும். ஆனால் வீட்டிலேயே தோசை மாவு அரைத்தால், நம் வயிறார உண்ணலாம். வயிற்றுக்கும் கேடு வாராது. இல்லையா? அதாவது எது ஒன்றுக்கும், நாம் முனைந்து செயல்படுவது மிகவும் நல்லது என்பதைத்தான் சொல்ல வந்தது.



அதே போல்தான், நாம் வணங்கும் அன்னையை, நம் வீட்டிற்கு அழைத்து வந்து, பூக்கள் வைத்து, ஆராதிக்கிறோம். நம் மனதின் விருப்பப்படி அன்னையை நம் வீட்டில் ஆராதித்து, எப்போது வேண்டுமானாலும் வணங்கலாம். நம் மனதிலுள்ளதை அன்னையிடம் கூறலாம். ஆனால், நாம் உடனுக்குடன் பலனை எதிர்பார்த்து, ''பூக்களை வைத்தோமே, இன்னும் பலன் கிடைக்கவில்லையே'' என எண்ணுகிறோமே, அந்த எண்ணம்தான் நமக்கும், அன்னைக்கு-மிடையேயுள்ள பாலத்தின் தூரத்தை அதிகப்படுத்துகிறது என்பதுதான் உண்மை.

**"கடமையைச் செய். பலனை எதிர்பாராதே"**

எத்தனை உண்மையான வரிகள். ஆனால் நாம் கடமையைச் செய்கிறோமோயில்லையோ... எந்த இடத்திலும் பலனை மிகவும் எதிர்பார்க்கிறோம்என்பதுதானே நிஜம். ஏன், பலனைப்பற்றி நினைக்காமல், நம்மால் ஆனதைச் செய்யலாமே...

ஒரு நாளைப்போல் வயிறார சாப்பிட, அரிசி, பருப்பிலிருந்து, காற்கறிபோன்ற வியஞ்சனங்கள் வரை, எத்தனை சாமான்களை வாங்கி, அதை வேகவைத்து, கறிகாய் நறுக்கி, ஒன்றுக்கொன்று தோதாகயிருக்கும்படி, யோசித்து, யோசித்து, உப்பு, காரம், எண்ணெய், எல்லாம் சரிவிகிதத்தில் போட்டு, சுசி, ருசியாய் செய்து சாப்பிட, சலித்தே போகாமல், தினமும் வகை, வகையாக சாப்பிடுகிறோம். எத்தனை நேரமானாலும் மெனக்கெட்டு, மிகுந்த ஈடுபாட்டோடு செய்கிறோம். அதற்கான நேரத்தைப் பற்றி நாம் எண்ணிப் பார்ப்பதில்லை. இது வருடக்கணக்கில் தினந்தோறும் நடக்கிறது.

அதுவே, அன்னையிடம் நாம் நம் மனதிலுள்ள எல்லாவற்றையுமே கொட்டுகிறோமோ எனில் 'இல்லை' என்பது நமக்குள்ளேயே பதில் இருக்கிறது. நம் தேவைக்கேற்ப அன்னையிடம் நாம் வேண்டுவது நம் இஷ்டப்படிதான். ஆனால், அன்னை நினைப்பதோ? எதையும் உண்மையுடன், சத்தியத்துடன் இருக்க வேண்டும். எதையும் முழுமையாகச் செய்யவேண்டும். சஞ்சலமின்றி செய்ய வேண்டும். நம் மனதின் விருப்பத்தைவிட, அன்னையின்

கோட்பாடுகளின்படி நடக்கவேண்டும்என்பதில் நாம் உறுதியோடு இருந்து செயல்பட்டால், நம் வாழ்க்கையின் உச்சம், எல்லாவிதத்திலும் திரண்டு எழும்என்பதில் ஐயமேயில்லை.

❀❀❀

பார்வதி, கணவனின் வரவிற்காகக் காத்திருந்தாள். எப்படிப் பேசவேண்டும், அவனுடைய மனம் பாதிக்காமல், ஒத்துக்கொள்ளும்படிச் செய்யவேண்டும். நிச்சயம் அன்னை, என்னை வழிநடத்துவார். அந்த நம்பிக்கை எனக்கு, பரிபூரணமாகயிருக்கிறது. நடக்கும்.

இமைகள் மூடி, மனதில் அன்னையை நிறுத்தி பிரார்த்தித்தாள். ''பாரு... பாரு... பார்வதி...'' லேசான குழறலோடு கூப்பிட்ட வண்ணம், தள்ளாடிய வண்ணம் வந்தான் ராமனாதன்.

''ம்... இதுவும் நல்லதுக்கே...'' என நினைத்தாள் பார்வதி. அன்னையை மனதிலிறுத்தி, அவனெதிரில் நின்றாள்.

''பாரு, பசிக்கிறது... சாப்பாடு போடறியா...'' குழறல்தான்.

''இதோ போடறேனே... உங்களோட பேசணும்னு நானும் காத்துண்டு வாசலையே பாத்துண்டுதானே நிக்கிறேன். வாங்கோ மொதல்ல சாப்பிடுங்கோ. கை கால் அலம்பிண்டு வாங்கோ. ம்...''

தள்ளாடியபடியே, கை, கால் அலம்பினேன் பேர்வழி என வேஷ்டியை நனைத்துக் கொண்டு வந்தான். பார்க்கப் பார்க்க அழுகை முட்டிக்கொண்டு வந்ததை அடக்கினாள்.

தட்டுவைத்து, சாதத்தை, சாம்பாருடன் கலந்தே வைத்தாள். கீழேயும், மேலேயும் போட்டபடி சாப்பிட்டான்.

''நாம இந்த வீட்டைக் காலி பண்ணிடலாம்னு நினைக்கறேன். என்ன சொல்றேள்?''

சட்டென ஏதோ அதிர்வு ஏற்பட்டதுபோல் திரும்பினான் அவளை நோக்கி.

''பயமே வேண்டாம். இந்த வீட்டுக்கு வாடகைக் கொடுக்கணும். அதனாலே... மாமி ஆத்துக்கே குடி போயிடலாம்னு...''

இப்போது ராமனாதனுக்கு, இது என்ன திடீர் குழப்பம்னு



தோன்ற, பார்வதியையே வெறித்துப் பார்த்தான்.

''ம்... ஹும்... உங்களுக்கு இஷ்டமில்லேன்னா வேண்டாம். மாமிதான் சொன்னா. ஏண்டி பாரு, வீணா வாடகைக் கொடுத்துண்டிருக்கே. எங்காத்தோடவே வந்துடு. வாடகைன்னு ஒண்ணும் தர வேண்டாம்னா. எனக்கும் ரெண்டு குழந்தைகளையும் சமாளிக்க தெம்பு வேண்டாமா? நீங்களும் எப்பப் பாரு வெளியிலேயே, பிஸினஸ், பிஸினஸ்னு அலையறேள். ஒண்டியா... என்னாலயும் முடியலே... அதா...ன்... அதா...ன்... வேண்டாம்னா சொல்லிடுங்கோ... மாமிகிட்டேயும் சொல்லிடறேன். அவாளும் வேறே யாருக்காவது வாடகைக்கு விடுவா. நமக்குன்னா வாடகை வேண்டாம்னு சொல்லிட்டா... சரி... மொதல்ல தட்டைப் பார்த்து சாப்பிடுங்கோ... ரசம்... இன்னும் கொஞ்சம் விடட்டுமா...''

ஒரு வெளிச்சக் கோடு, ஒரு வினாடிக்கும் குறைவாக 'பளிச்'சென மின்னல் போல் தோன்றி மறைந்தது. போதை கொஞ்சம் குறைந்திருந்தது. தெளிவு ஏற்பட்டது.

''வாடகை தர வேண்டாம்'' என்பது அவன் மனதில் ஒரு வெளிச்சத்தைத் தந்தது. தட்டிலிருந்ததை அள்ளி, அள்ளி சாப்பிட்டான். தட்டிலேயே கையை அலம்பினான்.

''பாரு... நிஜமாத்தான் சொல்றியா? அப்புறமா, மாமி காலி பண்ணுன்னு சொன்னா... இந்த வீடு கிடைக்காதேடி... அப்புறம் நடுத்தெருவுலதானே நிக்கணும்...''

''ம்... ஹும்... அப்டில்லாம் மாமி சொல்லமாட்டா? ஏன்னா... மாமிக்கும் வயசாயிடுத்து. தனியாயிருக்கணுமேன்னு பயப்படறா. நம்ம, ரெண்டு குழந்தைகள் மேலேயும் உசுராயிருக்கா. நானும் ஏதாவது தெரிஞ்ச வேலையைச் செய்யலாமோன்னோ...''

இப்போது அவன் மனது கணக்குப் போட்டது.

''ம்... இதுவும் நல்லதுக்குத்தான்... நம்ம கை... கடிக்காது. இஷ்டப்படியிருக்கலாம்...''

ஆனால்... அன்னையின் இருப்பிடமாக விளங்கும் அந்த வீட்டிற்குப் போனாலல்லவா எது... எப்படி... யாரிஷ்டப்படி நடக்கப்

போகிறதுஎன்பது தெரியும்?...

"என்னமோ சொல்றே? ஆனா... அப்புறமா சரிப்படலே... மாமி படுத்தறான்னோ... இல்லே எனக்கு இடைஞ்சலாவோ நடந்தா... என்னைத் தப்பு சொல்லக் கூடாது... புரிஞ்சுண்டியா..."

'சரி' என்பதுபோல் அமைதியாகத் தலையாட்டினாள் பார்வதி. உடனே அன்னையை மனதில் நிறுத்தி மனதார பிரார்த்தித்தாள் அமைதியுடன்.

❀❀❀

சாமான்களையெல்லாம் பக்கத்து வீட்டிற்குக் கொண்டு போய் வைத்தாயிற்று. நல்ல நாள் பார்த்து சமையலும் செய்தாயிற்று. கணவனுக்காகக் காத்திருந்தாள். அன்று அவன் வரவேயில்லை.

நேரே அன்னையினருகில் சென்று நின்றாள்.

"அன்னையே... என் கணவர் திருந்தி, நல்லபடியாக வருவது உன் பொறுப்பு. கண்டிப்பாய், நிச்சயமாய் எனக்கு நீ உதவுவாய் என்கிற எண்ணம், என் சரீரம் பூராவுமாக ஓடுகிறது. என் நம்பிக்கை வீண் போகாது. நீ... எனக்காக எல்லாம் செய்யும் போது, நான் ஏன் கவலைப்பட வேண்டும்? ஆனால் வேண்டுவது, அதுவும் உன்னை வேண்டுவது என் வேலை. என் மனப்பூர்வமான, உன் மேல் முழு நம்பிக்கையோடு நான் செய்யும் பிரார்த்தனையும் வேண்டுதலும் மட்டும்தான் என் வேலை. அதில் எதைச் சரிசெய்ய வேண்டுமோ... அதை நீ, நிச்சயம் செய்வாய் அம்மா. அந்த நம்பிக்கையும், அந்த நம்பிக்கையினால் ஏற்படும் தைர்யமும் என்னுள் ததும்பியிருக்கிறது. என் மனக்கிலேசம், சஞ்சலம் எல்லாமே உன்னிடம் கொடுத்துவிட்டேனே... அப்புறம், நான் ஏன் கவலையோ, யோசனையோ படவேண்டும். மாட்டேன். உன்னிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டேன். அதன்பிறகு எனக்குள் எந்த கவலையுமின்றி நிச்சிந்தையாக-யிருக்கிறேன். இதுதான் உண்மை. எது நடந்தாலும், என்னை அது பாதிக்காது. ஆமாம், நடப்பது உன்னிச்சைப்படிதானே! அப்படியிருக்க நான் எந்த யோசனையோ, எண்ணங்களின் கூட்டங்களையோ என்னுள் நுழைய அனுமதிக்கமாட்டேன் அன்னையே... அன்னையே



சரணம். அன்னையே சரணம். அன்னையே சரணமம்மா.

இரு கரம் கூப்பி, கண் மூடியவளின் தியானம், நின்றபடியே தொடர்ந்தது.

'தடார்' என ஒரு சப்தம், அவளருகிலிருந்து கேட்க, கலைந்தாள். தள்ளாடி வந்தபடி நின்ற ராமனாதன்தான் அங்கிருந்த ஒரு பாத்திரத்தை இடறிவிட்டு கிழே விழுந்திருந்தான்.

அன்னையைப் பார்த்தாள். கீழே அன்னையின் காலடியில் விழுந்திருந்த கணவனையும் பார்த்தாள். சிரிப்பு வந்தது. மலர்ச்சியுடன் சந்தோஷம் பொங்கியது.

"ம்... இப்போதிலிருந்தே உன் வேலையை ஆரம்பித்துவிட்டாயே அம்மா... நீ... என்ன செய்தாலும் மனதார ஏற்றுக்கொள்ள எப்பவும் தயாராகயிருக்கிறேன். நன்றியுடன் எப்போதும் உன்னையன்றி வேறே யாரையும் நினைக்கக்கூட மனது இணங்கவில்லையம்மா... உன்னிடத்தில் என்னையே அர்ப்பணித்துவிட்டேன். இனி நடப்பதெல்லாம் உன் செயலே..."

பிரார்த்தித்தபின், கீழே விழுந்திருந்த கணவனின் முகத்தில் 'ஜில்'லென்ற நீரைத் தெளித்தாள். அவனும் அதிர்ந்தவனாய், தன் போதையிலிருந்து தெளிந்து எழுந்தான்.

❀❀❀

வந்த புதிதில், என்னதான் குடித்திருந்தாலும், இரவு பதினொரு மணிக்குள் வந்து விடுவான் ராமனாதன். வந்ததும் சாப்பிட்டு, சந்தடியில்லாமல் படுத்து விடுவான்.

பார்வதிக்கும் கொஞ்சம் நிம்மதியாகயிருந்தது.

ஆனால் இப்போது வர, வர, நேரம் கெட்ட நேரத்தில் வந்து கதவை தட்டுவதும், தள்ளாடித் தள்ளாடி, வேஷ்டியைக் கையில் பிடித்தபடி வருவதும் அவனது வழக்கமாகயிருக்க, மாமி, மறுநாள் காலைக்காகக் காத்திருந்தாள். காலை அன்னையின் முன் நின்று பிரார்த்தித்து வேண்டிய பின்பே அவன்முன் நிற்கக் காத்திருந்தாள். விடிந்தது. காபி ஆனது. ராமனாதன் கூடத்தில் வந்து நின்றபோது மாமி ஆரம்பித்தாள்.

‘‘ராமனாதா... சித்த இங்கே வாயேன். உங்கிட்டே நான் பேசணுமே... வா...’’

உள்ளுக்குள் ஒரு சின்ன அதிர்வும், பயமும் ஏற்பட்டது உண்மை தான். ஆனாலும் விரைப்பாகவே நின்றான்.

‘‘இதோ பாரு. எனக்கோ வயசாச்சு. ராத்திரியில தூக்கம் கெட்டா சரீரம் ஆடிப்போறதுப்பா. கண்ணல்லாம் எரியறது, உடம்பு தள்றது. அதனாலத்தான் சொல்றேன். ராத்திரியில லேட்டா வராதேப்பா. பத்து, பத்தரைக்குள்ள வந்துடு. சரியா... ம்... சாப்டியோ... போய் சாப்டு படு. பாருவும், பாவம் ரெண்டு குழந்தைகளோட திண்டாடறா. சீக்கிரமா அவளும் படுத்துக்க வேண்டாமா? போப்பா...’’

சொல்லிவிட்டுத் தன் அறைக்குள் போனாள் மாமி.

உள்ளுக்குள் ஒரு கோபம் கிளர்ந்தெழுந்தாலும், போதையின் குறைவு உணர்வில் அது உடனே அடங்கிவிட்டது. வாடகையில்லாத வீட்டை தந்திருக்கும் மாமியை இப்போது பகைத்துக் கொண்டால், நஷ்டம் நமக்குத்தான் என யோசித்தவனின் மனம், கொஞ்சம் மெதுவாக, மிக மெதுவாக அசைந்தது.

சாப்பிடும் போது, பேச்சேயில்லாமல் சாப்பிட்டான்.

கண்கள் நிறைய தூக்கத்துடன், களைப்பானவளாக பரிமாறும் மனைவியைப் பார்க்கப் பார்க்க... மனதுள் ஒரு நெகிழ்வு அவனையறியாமலேயே ஏற்பட்டது.

‘‘சாப்பிட்டியா பாரு... குழந்தைகளுக்கும் ஆகாரம் குடுத்தாச்சாம்மா பாரு...’’

கேட்ட கணவனின் பரிவு, அவளுள் ஒரு மகிழ்ச்சியான பேரலையை ஏற்படுத்தியது. கண்கள் அவனையே பார்த்தாலும் இதயம் அன்னையை நினைத்தது. ‘‘ம்... எல்லாரும் சாப்டாச்சு... இன்னும் கொஞ்சம் கூட்டு போடட்டுமா...’’

தன்னை எதையும் கேட்காமல், கோபிக்காமல், பரிந்துணர்வுடன் ‘இன்னும் வேண்டுமா’ எனக் கேட்கும் மனைவியின் பரிவில், உபசரிப்பில், தனக்குள் தானே ஒடுங்கி சிறுத்துப் போனான். கண்கள் தளும்பின.



‘‘அய்யய்யோ... மொளகாவைக் கடிச்சு மென்னுட்டேளா. இந்தாங்கோ தண்ணி. மொதல்ல குடியுங்கோ... சர்க்கரை வேணுமான்னா கொண்டுவரட்டுமா... பார்த்து சாப்பிட மாட்டேளா... நான் ஒரு மக்கு. மொதல்லேயே மொளகாவை எடுத்துட்டுப் பரிமாறியிருக்கணும்... ம்...’’

இப்போது கேவலும் அவனையறியாமலேயே வெளிப்பட்டது. ‘‘ஏன்னா... ஏன்? ஏன் அழறேள்... எனக்கு பயமாயிருக்கே... மாமியை எழுப்பட்டுமா... இருங்கோ வரேன்...’’

எழுந்தவளை, எழுந்திருக்க விடாமல் அப்படியே அமர்த்தினான்.

‘‘பாரு... எனக்கு... எனக்கு அவமானமாயிருக்குடி... உன்னையும், குழந்தைகளையும் கவனிக்காம... சே...’’ அழுதபடியே சாப்பிட்டு முடித்த கணவரையும், அங்கே சுவற்றில் மாட்டியிருந்த அன்னையின் படத்தையுமே பார்த்தவளின் கண்களிலும் நீர் நிரம்பியது.

தள்ளாடியபடியே எழுந்து போன கணவரையும், அன்னையையும் மாறி, மாறி பார்த்தாள்.

‘‘ம்... அம்மா... உன் பாதங்களையே பற்றிக்கொண்டு, உன்னையே நினைக்கும் எனக்கும், உன் பரிவும், பாசமும், என்றென்றும் கிடைக்க அருள்வாய் அம்மா... நிச்சயமாய், உன்னால் என் கணவர் திருந்துவார். அந்த நம்பிக்கை எனக்குப் பூரணமாகயிருக்கிறது. இன்றிலிருந்தே எனக்குள் ஒரு ‘‘இங்கிதமான’’ எண்ணங்கள் ஏற்படுகிறதேம்மா... நிச்சயம் என் கணவரை அன்னையே... துரிதத்திலேயே சரியாக்கிவிடுவாய். ஆமாமம்மா. உன்னையன்றி எந்த தெய்வத்தையும் நானறியேன். சரணமம்மா... சரணம்...’’

‘‘பாரு... என்னாச்சு? ஏன் இப்டி திக்பிரமையா உக்காந்திருக்கே... என்னாச்சும்மா...’’

பரிவுடன் கேட்டபடி, தள்ளாடியபடியே வரும் கணவனை, சட்டென எழுந்து பிடித்தபடி, படுக்கையில் படுக்க வைத்தாள். மீதி வேலைகளையும் முடித்து, அன்னையை நினைத்தபடியே படுத்தவளின் தூக்கத்தில் அருமையான கனவுகள், மகிழ்ச்சியை நிரப்பின.

❀❀❀

இரு குழந்தைகளும், கணவனுடனும் நடந்து போகிறாள் பார்வதி. வழியெல்லாம் பூக்களின் மணம். காற்றில் அசைந்தாடும் அந்தச் செடிகளின் ஒவ்வொரு முனையிலும் எத்தனை எத்தனை வண்ணங்கள் நிறைந்த பூக்கள். எல்லாவற்றின் வாசனையும் கலந்து, சுகந்தம் அவர்களை சுகமாக அணைத்தது.

ராமனாதன், குழந்தைகளை ஓடவிட்டு, அவனும் ஓடுகிறான். கலகலவென குழந்தைகளின் சிரிப்போடு, அவனுடைய கம்பீரமான ஆண் குரலின் சிரிப்பும் சேர்ந்து அந்த இடத்தையே கலகலக்க வைத்தது. பாருவால் சிரித்து, சிரித்து, முடியாமல் அப்படியே ஒரு பெரிய மகிழமரத்தினடியில் அமர்ந்தேவிட்டாள். பூக்களின் சுகந்தம் அவளைக் கண்களை மூடி அனுபவிக்க வைத்தது. அந்தப் பெரிய மரத்தினடியில், அப்படியே சாய்ந்து கண்களை மூடியவளை...

யார் உலுக்கி எழுப்புகிறார்கள். சட்டென விழிகள் விரிந்தன. சுற்றுமுற்றும் பார்த்தாள். தோட்டமோ, பூக்களோ இப்போது காணோம்.

அவள் சரிந்து அமர்ந்திருந்தது மகிழ மரத்தின் அடியிலல்ல. வீட்டுத் தூணில்தான் என்பது புரிந்தது.

ஆனாலும், அந்தத் தோட்டமும், பூக்களும், செம்மண் பாதையில் கணவனோடும், குழந்தைகளோடும் கலகலவென சிரித்தபடி நடந்தது அவ்வளவும் கனவா...?

'ஆம்' என்றது நிதர்சனம். ஆனாலும் அவள் மனதில் மகிழ்ச்சிப் பொங்குவது, நிற்கவேயில்லையே...

நேராக அன்னையிடம் சென்று நின்றாள்.

''அம்மா... என்னை நீ முழுமையாக ஏற்றுக்கொண்டு விட்டாயா? அதனால்தான் எனக்கு இப்படி ஒரு, சௌலப்யமான கனவைத் தந்தாயா? நிச்சயம் என் வாழ்க்கையில், நல்ல பூக்கள் மலரும் என்கிற உத்தரவாதம் தந்துவிட்டாயா அன்னையே, அன்னையே, இனிமேலும் உன்னையன்றி வேறு யாரையுமே என்னால் நினைக்கக் கூட முடியவில்லையே. அப்டி என்னை ஆட்கொண்டு விட்டாயே அம்மா... அம்மா... அம்மா...''

உணர்வு மீறலில் அப்படியே மயங்கிச் சரிந்தவளை, அப்படியே



சரிய விடாமல் பிடித்தது...

மாமியேதான். பதறியபடி தன் வயதையும் மீறி ஓடி வந்து அவளைக் கீழே விழாமல் பிடித்துக் கொண்டது.

அதே சமயம், பதறியபடியே ஓடி வந்த மற்றொரு ஜீவன்... சாட்சாத் அவள் கணவன் ராமனாதனே தான்.

இருவரையும், மாறி மாறிப் பார்த்தவளின் கண்களில் சுரந்தது, கண்ணீரா? ஆனந்த பாஷ்பமா?

❀❀❀

ஒரு வாரம் அமைதியாகச் சென்றது. வீட்டிற்கும் சரியான நேரத்திற்கு வந்தான். மிக ஒழுங்காக நடந்து கொண்டான். மாமி உட்பட, பார்வதியின் மனதிலும் வெளிச்சம், பிரகாசமாக மாறியிருந்தது.

அன்று மாலை இரு குழந்தைகளையும், பார்வதியையும் அழைத்துக் கொண்டு வெளியே சென்றான் ராமனாதன். பார்வதியின் சந்தோஷம் அதிகமானாலும், சட்டெனத் திரும்பி அன்னையையே பார்த்தாள். மனதுள் பல எண்ணங்களின் கோர்வை கோர்த்தபடியிருக்க, அன்னையின் கண்கள் ஒரு கணம் அவள் மேல் ஆழமானப் பார்வையை வீசுவது போலிருந்தது. சட்டென மறைந்தும் போனது. அதற்கு என்ன அர்த்தம்?

அந்தக் கண்களின் தீட்சண்யத்தை மட்டும் அவளால் உணர முடிந்தது. ஆனால் காரணகாரியத்தைத் தெரிந்து கொள்ள முடியவில்லையே. மனதில் ஏதோ ஒன்று நடக்கப் போகிறது என்கிற உணர்வு, உள்ளுக்குள்ளிருந்து கிளர்ந்தெழுந்தது. அது நல்லதுக்கா இல்லை... ம்... ஹும்... மீண்டும், மீண்டும், அன்னையின் தீட்சண்யமான பார்வையையே தன்முன் கொண்டு வந்து பார்த்தாள். அதில் ஒரு எச்சரிக்கையும் தெரிவது போலிருக்க... சட்டென விதிர்த்துப் போனாள்.

ஆம்... ராமனாதனின் இந்த, திடீர் பாசம், கடையில் விற்கும் 'திடீர்' சாமான்களைப் போலவா? அவ்வளவுதானா... எச்சரிக்கையாக-யிருக்க வேண்டும். அன்னையை என் இதயத்தில் சுமந்து செல்ல வேண்டும். நாவில் 'அன்னையின் சரணம்' மட்டுமே புரளவேண்டும். என் இரு கண்களிலும் அன்னையின் தீட்சண்யப் பார்வையை ஏற்றிக்

கொள்ள வேண்டும். அன்னையே என்னுள் நீயே புகுந்து, என்னை எச்சரிக்க வேண்டுமம்மா. நான் உன் குழந்தை. இந்தக் குழந்தையின், குழந்தைகளையும் நீதானம்மா எந்த ஒரு அசம்பாவிதமும் நடக்காமல், நடக்கவிடாமல் காப்பாற்ற வேண்டும். கண்டிப்பாய், நிச்சயமாய், நீ என்னுடன் வருவாய் அம்மா... அம்மா... அம்மா...

நடந்தபடியே ஒரு வினாடிக்கும் குறைவாகக் கண்ணிமைகளை மூடி பிரார்த்தித்துப் பின், தன் கண்களை நாலாபுறமும் சுழலவிட்டபடியே நடந்தாள்.

''பாரு... இங்கேயே நில்லு, பெரியவன் கையைக் கெட்டியாப் புடிச்சுக்கோ. அஞ்சே நிமிஷம்... இதோ வந்துடறேன்...''

சின்னவனை கையில் ஏந்திக்கொண்டவனாய் நடந்த கணவனின் கண்களில் தெரிவது... ம்... ஹூம்... புரியவில்லை.

சட்டென பெரியவனையும் அழைத்துக் கொண்டு, கணவனின் பின்னால், சில அடிகள் தூரத்தில் தொடர்ந்தாள். ஜன நடமாட்டம் அதிகமிருந்த வீதியானதால், கணவனைப் பின் தொடர்வது சுலபமாகயிருந்தாலும், அவன் கண்களில் படாமல் பின் தொடர்வது மிகக் கடினமாகயிருந்தது.

அன்னையை மனதில் மட்டுமல்ல, சரீரம் முழுவதும் சுமந்து சென்றதால், ஒரு அசாதாரண தைர்யம் அவளுள் ஏற்பட்டிருந்தது. இரு விழிகளும் கணவனின் நடவடிக்கையையறியப் பின் தொடர்ந்தாலும், மனம் மட்டும் அன்னையுடனேயே ஒன்றிப்போய், அன்னையையே சுமந்திருந்தது. வேறு எந்தவிதமான சலனமும் அந்த இதயத்தில், அதன் துடிப்பில் இல்லவேயில்லை.

திடீரென கண்களிலிருந்து அவள் கணவன் விடுபட்டே போனான். மனது துடித்தது. அதே சமயம் சட்டென அன்னையின் முகம், விஸ்வரூபம் போல் தீர்க்கமான, தீட்சண்யமான கண்களுடன் அவள் கண்களுக்குத் தெரிந்தார். மனதின் துடிப்புத் தானாகவே அடங்கியது. எது நடந்தாலும், அது நன்மைக்கே என்கிற அழுத்தமான நம்பிக்கைத் தானாகவே உருவானது. நிம்மதியோடு கண்களை நான்குபுறமும் சுழற்றினாள்.



என்ன ஆச்சரியம்? அவள் கணவன் குழந்தையுடன், இடதுபுறம் பதினைந்து வீடுகள் தள்ளி, குழந்தையோடு நிற்பது தெரிந்தது. புரிந்தும் போனது. விரைவாக நடந்தாள், பெரியவனை முடியாமல் இடுப்பில் சுமந்தபடி. மூச்சு வாங்கியது. வியர்த்தது. அப்படியும்... எதையும் உணராமல் கணவரருகில் போய் சடாரென்று நின்றாள் எதிரே. இடுப்பில் இருந்த பெரியவனைக் கீழே இறக்கினாள். பிரமித்து நிற்கும் கணவரின் கையிலிருந்த சிறியவனைத் தன் இடுப்பில் இறுக்கிக் கட்டிப் பிடித்தாள். பெரியவனையும் இழுத்துக்கொண்டு, கிடுகிடென திரும்பிப் பார்க்காமல் நடந்தாள்.

பிரமித்துப் போனான் ராமனாதன், நிதரிசனத்திற்கு வந்தபோது, பார்வதி, இரு குழந்தைகளுடன் விடுவிடுவென நடந்ததில் வெகுதூரம் வந்துவிட்டிருந்தாள். மூச்சு வாங்க நடந்தவளின் இதயம் வேகமாகத் துடித்தாலும், அந்தத் துடிப்பில் அன்னையின் சரணமாகத்தான் துடித்தது.

வீட்டிற்குள் நுழைந்தவளிடம் வேகமிருந்தது. அதே வேகத்துடன் அன்னையின் பாதாரவிந்தங்களில் இரு குழந்தைகளையும் நிறுத்தினாள். அன்னைக்கு நன்றி கூறினாள். வேண்டினாள் மனமாற.

''இனி என் குழந்தைகளுக்காக, நான் கடுமையாக உழைப்பேன். அதற்கான சக்தியையும், வழியையும் காட்டு அம்மா... அவரை ஒரு பேச்சும் கேட்கமாட்டேன். அவர் திருந்தி வரவேண்டும். என் குழந்தைகளுக்குத் தகுந்த, உண்மையுள்ள தந்தையாக மாறி வர வேண்டும். அது உன்னால் முடியும். உன்னால் மட்டுமே முடியும். நிச்சயமாய் நடக்கும். அம்மா... அம்மா...''

கண்கள் துளிர்க்க வேண்டியவளின் மனம் அமைதியடைந்தது.

❀❀❀

''மாமி... உங்ககிட்டே நிறைய யோசனை கேக்கணுமே... மாமி''

''என்னடி பாரு... திடீர்னு எங்கேயோ போனேள். வந்துருக்கறது திரும்ப நீயும், குழந்தைகளும்தான். அவன் எங்கே போனான்? என்னாச்சு? சொல்லு, சொல்லும்மா...''

கண்களில் துளிர்த்ததை அப்படியே அடக்கினாள்.

‘‘மாமி... இனிமே அவரை நம்ப மாட்டேன். நம்பவே மாட்டேன். சின்னதை எடுத்துண்டு, என்னையும் பெரியவனையும் ஓரிடத்துல நிறுத்திட்டு ஓராத்து வாசல்ல நிக்கிறார் மாமி. புரிஞ்சு போச்சு. அதுதான் ஒரு மார்வாடி வீடுன்னு தெரியும். அவாளுக்கு குழந்தையே பொறக்காதுன்னு டாக்டர் சொன்னதும் எனக்குத் தெரியும்.

‘‘எப்டிடி உனக்குத் தெரியும்... எங்கிட்ட கூட சொல்லலியே...’’

‘‘மாமி, என் கஷ்டங்களையேத்தான் உங்ககிட்டே சொல்றேன். இப்போ ஒரு நல்ல சேதி சொல்றேன் கேட்டுக்கோங்கோ. நான் சின்னவனை எடுத்துண்டு ஆஸ்பத்திரிக்குப் போனபோதே... அவ குழந்தையை கேட்டுண்டு டாக்டர்கிட்ட பேசினா. டாக்டரும் யாராவது சரின்னா சொல்லியனுப்பறேன்னா... அப்ப அவளையும், அவாத்துக்காரரையும் பார்த்தது. அப்புறமா ஒரு தடவை அந்தப் பக்கம் போனபோது அந்தப் பொண்ணு அந்த வீட்டுல நிக்கிறதையும் பார்த்தேன். அது மட்டுமில்லே மாமி, அவாத்துக்காரரோட, எங்காத்துக்காரரும் நின்னு பேசினதையும் ஒரு தடவை பார்த்தேன். அதான் இவர் சின்னவனை எடுத்துண்டு, அங்கே நிக்கறதைப் பார்த்ததும், எப்டி அவ்வளவு ஒரு வேகம் வந்ததுன்னு தெரியலே. ஆனா, அன்னையோட ‘கண்கள்’ மட்டும் எனக்கு போகறதுக்கு முன்னாடியே... ஜாக்கிரதையாயிருன்னு சொல்றாப்பலயிருந்துது. அதான் பறந்து போய் என் குழந்தையை அவரிட்டேயிருந்து எடுத்துண்டு வந்துட்டேன். மாமி, இனிமே அவரை ஆத்துக்குள்ளே விடப்டாது. நான் உழைச்சு என் ரெண்டு குழந்தைகளையும் காப்பாத்தணும். வந்தா... கதவைத் திறக்கவேண்டாம். நீங்க பேசவும் வேண்டாம். நானே பேசியனுப்பிடறேன். அன்னை மேலே எனக்கு நம்பிக்கையிருக்கு. அவர் நிச்சயமா திரும்பி வருவார்னா வருவார்தான். அதுவரைக்கும் எனக்கு, குழந்தைகளோட சாப்பாட்டுக்கு, படிப்புக்குன்னு, உடம்புல தெம்புருக்கறப்பவே சம்பாதிக்கணும் மாமி. ஏற்பாடு பண்றேளா...’’

தழுதழுத்த குரலில் கேட்கும் பார்வதியைத் தன்னோடு சேர்த்து, அணைத்து, அவளுடைய கண்ணீரைத் துடைத்தாள் மாமி.

கதவு தட்டும் சத்தம் கேட்டது. மாமியிடம் குழந்தைகளை ஒப்படைத்துவிட்டு, கதவைத் திறக்காமலேயே பேசினாள் பார்வதி.



பேசும்முன் அன்னையை இதயத்தினுள் மட்டுமின்றி உச்சி முதல் பாதம் வரை, அன்னையின் விஸ்வரூபத்தைப் பிரதிஷ்டை செய்தாள். இதயம் ‘லப்டப்’பிற்கு பதிலாக ‘அன்னையே சரணம்’ என்றே துடித்தது. கண்களைத் திறந்தாள் பார்வதி.

உடனே பின் வாங்கினான் ராமநாதன். ‘‘என்னாயிற்று எனக்கு? ஏன் இப்படி பின் வாங்குகிறேன். கூடாது... எதிர்க்க வேண்டும். பெண்ணிடம் அடங்குவது அசிங்கமில்லையா...’’ மீண்டும் கதவருகில் செல்ல முயன்றான். பார்வதியின் தீர்க்கமான பார்வை அவனை, அவளைப் பார்க்கவிடாமல் தடுத்தது.

‘‘கதவைத் தொற. சீக்கிரமா... சீக்கிரமா வாயேன்...’’

வாய் திறந்து பதிலே சொல்லாமல், அப்படியே அவனை உறுத்துப் பார்த்தாள். பார்வையின் தீட்சண்யம், ராமநாதனால் தாங்க முடியவில்லை. தலை குனிந்தான். குரலில் இப்போது தொய்வு. அவனைப் பார்க்கவே பரிதாபமாகயிருந்தது. அப்படியே நின்றான். எத்தனை நேரம்... தெரியவில்லை.

‘‘பாரு... கதவைத் தொற... எத்தனை நேரம் நிக்கறது? பார்வதி... சீக்கிரமா கதவைத் தொற...’’ கோபம் தெறித்தது வார்த்தையில்.

மாமி வந்து நின்றாள். இப்போது, அவள் முகத்தில் ஒரு கோபம்.

‘‘ராமநாதா... இதோ பாரு... எங்காத்துக்கு வந்தாச்சு. உனக்கும் சரியான சம்பாத்தியமில்லே... அதனால இந்தாத்துக்கு வரச் சொன்னேன். ஆனா... உன்னோட குழந்தையையே நீ... ஒரு மார்வாடிக்குக் கொடுக்கத் துணிஞ்சுட்டே... தப்பு... இனிமே அப்படியெல்லாம் பண்ணமாட்டேன்னு சத்தியம்... இதோ... நான் வணங்கற அன்னை, ஸ்ரீ அரவிந்தர் எதிர்க்கால பண்ணணும். அப்பத்தான் இந்த வீட்டுக்குள்ள நுழைய அனுமதி. புரிஞ்சுதா... சொல்லு... சொல்லுப்பா...’’

பேசாமல் திரும்பிப் போகும் ராமநாதனையே வெறித்தாள் மாமி.

‘‘பாரு... என்னடி திரும்பிப் போறான்... வருவானா... கூப்பிடட்டுமா பாரு...’’

‘‘ம்... ஹூம், வேண்டாம் மாமி... நிச்சயமா வருவார். வரட்டும்.

ஆனா... மாமி... குழந்தைக்கு நீங்கதான் பொறுப்பு. ஏன்னா, எனக்கு ஏதாவது வேலைக்கு ஏற்பாடு பண்ணிடுங்கோ. என் சரீரத்துல தெம்புயிருக்கிறவரை உழைக்கணும்... என் குழந்தைகளுக்காக நான் உழைக்கணும். மாமி...'' தொண்டையடைக்கக் கூறினாள் பார்வதி.

''சொல்லிட்டியோன்னோ... இனிமே குழந்தைகளுக்கு மட்டுமில்லேடி... உனக்கும் சேர்த்துத்தான் நான் பொறுப்பேத்துக்கறேன், அன்னையோட அனுமதியோடத்தாண்டி. பாரு, பயப்படாதே. எல்லாமே நல்லதாவே நடக்கும்மா... வா...''

நேரே மாமியின் அறைக்குள் சென்று, அன்னையின் எதிரில் கண்களை மூடி அமர்ந்துவிட்டாள் பார்வதி.

புரிந்து கொண்ட மாமி, குழந்தைகளை உள்ளே அழைத்துப் போய் பெரியவனுக்கு சாதத்தை ஊட்டி, சின்னவனுக்குப் பாலையும் குடிக்க வைத்தாள். வயிறு ரொம்பியதில் இரண்டும் தூங்கின. சத்தமின்றி பார்வதியினருகில் நின்றாள். பார்வதி அசைவேயின்றி, ஆழ்ந்த தியானத்திலிருந்தாள்.

அன்னையிடமே, மனதுள்ளிருந்ததை மாமி கொட்டினாள்.

''அம்மா தாயே! உன்னையே நம்பியிருக்கும் இந்தப் பெண்ணிற்கு ஒரு நல்ல வழியைக் காட்டுவது உன் பொறுப்பு. அம்மா... உன்னையே நம்பி, உன்னையே சரணடைந்திருக்கும் எங்களுக்கு நீதாம்மா வழிகாட்டணும். அம்மா... அம்மா...''

மாமியும் அப்படியே வார்த்தைகளை மறந்து, இமைகளை மூடி, பார்வதியோடு அமர்ந்துவிட்டாள்.

*தொடரும்.....*

❀ ❀ ❀

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: N. Asokan

# சித்தரஞ்சன் தாஸ்

கல்கத்தாவில் இன்றுள்ள பெரிய ரயில்வே தொழிற்சாலைக்கு சித்தரஞ்சன் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. 1915 முதல் 1924 வரை காங்கிரஸில் சித்தரஞ்சன் தாஸ் காந்திக்குச் சமமாக இருந்தார். 1908இல் பகவான் கேஸ் நடந்தபொழுது சித்தரஞ்சன் தாஸ் அவருடைய வக்கீலாக இருந்தார். துரைசுவாமி அய்யர் பகவானுக்கு 1920இல் இலட்ச ரூபாய் கொடுத்தார். பகவான் மறுத்து விட்டார். அன்னை கூறியதின் பேரில் 10,000ரூ பெற்றுக் கொண்டார். அவர் காந்திஜியின் நண்பர். முதலில் பகவானைக் காணவந்தபொழுது எப்படி என்னிடம் வந்தீர்கள் என்றார். சித்தரஞ்சன் தாஸ் உங்களைப் பார்க்கச் சொன்னார் என துரைசாமி பதில் கூறினார். நாகபுரியில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் மகாநாட்டிற்கு சித்தரஞ்சன் கல்கத்தாவிலிருந்து வருபவர்கட்கெல்லாம் ரூ.30,000 செலவு செய்து அழைத்து வந்தார். ‘‘சித்தரஞ்சன் மகாராஜா மாதிரி செலவு செய்கிறார்’’ என்றார் மகாத்மா.

சித்தரஞ்சன் தாஸ் பகவானைப் பார்க்கப் புதுவைக்கு வந்தார். சந்தித்துப் பேசினார். பகவான் தேசீய இயக்கத்திற்கு மீண்டும் வரவேண்டும்எனப் பலரும் பிரியப்பட்ட நேரம். மகாநாட்டிற்குத் தலைமை தாங்க அழைத்தனர். பகவான் மறுத்து விட்டார்.

விடை பெறும்பொழுது சித்தரஞ்சன் பகவான் காலைத் தொடக் குனிந்தார். பகவான் தடுத்து நிறுத்தி,

***“அலிப்பூரில் நாராயண தரிசனம் பெற்ற பொழுது உங்கள் நெஞ்சில் நாராயணனைக் கண்டேன்” என்று கூறினார்.***

❀ ❀ ❀

# Security - பகவான் காப்பாற்றுவார்

எனக்கு பயமாக இருக்கிறதுஎனக் கூறுபவர்க்கு insecurity என்போம். தமிழில் நேரடியான சொல்லில்லை. அதனால் securityக்கும் நேரடியாகச் சொல்ல சொல்லில்லை. 10ஆம் வகுப்புடன் பள்ளியை விட்டு வந்து வீட்டில் படிக்கும் பையனின் நண்பர்கள் பட்டம் பெற்று வேலை தேடும்பொழுது, ‘‘எங்களுக்கெல்லாம் பட்டமிருக்கிறது. ஆனால் பயமாக இருக்கிறது. உனக்கு பட்டமில்லை. ஆனால் எப்படி பயப்படாமலிருக்கிறாய்?’’ என்று கேட்டனர். அவனுக்கு security இருக்கிறது. இவர்கள் insecure ஆக இருக்கிறனர். Security, insecurity என்பவை இன்றுள்ள நிலைமையைப் பிரதிபலிப்பவையில்லை. பரம்பரையாக உடலில் உள்ள உணர்வு.

- ✡ 20 கோடி பணம் சம்பாதித்த அரசியல் தலைவரைப் பற்றிப் பலரும் பேசும்பொழுது அவரை ஆதரித்துப் பேசியவர் “இந்த அரசியல்வாதிக்கு சிறு வயது வளர்ப்பால் insecurity” என்றார். 20 கோடி வந்த பின்னும் போகாத insecurity அது.
- ✡ இருந்த நிலம் போய்விட்டன. 3 தலைமுறைகளாக வசதியாக வாழ்ந்த குடும்பம் அண்டை வீட்டில் அரிசி கடன் வாங்கும் நிலை. பிள்ளைகட்குச் சாப்பாட்டுக்கு எந்த வருமானமுமில்லை. அவர்கட்கு insecurity பயமில்லை. அத்துடன் தாங்கள் வசதியான பணக்காரக் குடும்பம்என்ற ஆழ்ந்த நினைவு, உணர்வு தரும் சந்தோஷம், பெருமை ஏராளம்.
- ✡ கோடீஸ்வரன் மகன், கோடிக்கணக்காகச் சம்பாதித்தார். கையில் பணமில்லையெனில் insecurity வந்துவிடும்.
- ✡ இல்லாத குடும்பம். மகன் கோடி ரூபாய்க்குமேல் சம்பாதித்து விட்டான். அவரை insecurity பயம் பிடுங்கித் தின்கிறது. எந்த நேரமும் பிடித்து உலுக்குகிறது.
- ✡ அன்னையை ஆத்மாவில் அரை க்ஷணம் உணர்ந்த எவருக்கும் spiritual security ஆத்மாவில் பாதுகாப்புண்டு.

❀ ❀ ❀

August 2009 Jiviyam 15 Malar 4
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/09-11
Price: Rs.5/- WPP No.45/09-11


புதிய வெளியீடுகள்

கர்மயோகியின்

| | |
|---|---|
| பரம்பொருள் III | ரூ.200/- |
| எங்கள் குடும்பம் (பாகம் 2) | ரூ.250/- |
| உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம் | ரூ.100/- |
| யோக வாழ்க்கை விளக்கம் IV | ரூ.150/- |

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

| | |
|---|---|
| லைப் டிவைன் விரிவுரைகள் | ரூ.100/- |

*தமிழாக்கம்:* என். அசோகன்

| | |
|---|---|
| SATYA JYOTHI | ரூ.200/- |

(CONCISE TRUISMS)

N.Asokan

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை - 600 035.
✆: (044)-24347191